Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 13
இதழ் 21
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மாசி 18 முஹறம் 4 செவ்வாய்க்கிழமை (2-3-71)

நீலமின்றி நிகரற்ற வெண்மை தருவது




விஜயாஸ்
நீல சோப்
எங்கும் கிடைக்கும்
முருகானந்தா
குடிசைக் கைத்தொழிற்சாலை
முகமாலை — எழுதுமட்டுவாள்.

# பெற்றோல், டீசல் விலை நேற்றுமுதல் அதிகரிப்பு

## மண்ணெண்ணெய் போத்தல் 2 சதத்தால் உயர்வு

கோட்டைசெவ்வாய்

மண்எண்ணெய், பெற்றோல், டீசல், எரிபொருள் ஆகியவற்றின் விலை நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மண்எண்ணெயின் விலை ஒரு கலனுக்கு 12 சதத்தால் உயர்ந்துள்ளது. சுப்பர்பெற்றோல் ஒரு கலனுக்கு 25 சதத்தாலும் சாதாரணபெற்றோல் 34 சதத்தாலும் டீசல்,எரி பொருள் ஆகியவற்றின்விலை 15 சதத்தாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதிக பாவனையில் இருந்து வரும் மண்எண்ணெயின் விலையை பொதுமக்களின் நலன்கருதி கூடுதலாக அதிகரிக்கவில்லை என்றும் ஒரு போத்தலின் விலையை2சதத்தால் மட்டுமே உயர்த்தியுள்ளதாகவும் இந்த விலை உயர்வை பாவனையாளர்கள் பெரிதாகக் கணிக்காமல் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும்படியும் கைத்தொழில் விஞ்ஞான விவகார அமைச்சர் திரு ரி. பி, சுபசிங்கா நேற்று நாட்டுமக்களுக்கு விடுத்த வானொலிச் செய்தியில் கேட்டுக் கொண்டுள்ளார், இவற்றின் விலை அதிகரிப்பு பற்றிய விசேட கசெட் அறிவிப்புநேற்று நள்ளிரவு வெளிபிடப்பட்டது,

இலங்கை அரசாங்கம் மேற்படி எண்ணெய் வகைகளைக் கொள்வனவு செய்யும் உலக சந்தையில் இவற்றின் விலை அதிகரித்துள்ளதால், இந்த விலை அதிகரிப்பை அரசாங்கம் தவிர்க்க முடியாததாகி விட்டதென்றும் இதனுல் ஏற்படும் அசௌகரியங்களைப் பொறுத்துக் கொள்ளும்படியும் கைத்தொழில் அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.

வடபகுதியில் எண்ணெய் வளம்இருப்பதாக புவியியல் ஆராச்சியினர் தெரிவித்த கருத்தைத்தொடர்ந்து, மக்கள் அரசாங்கம் ரஷ்ய நிபுணர்களை இங்கு ஆராய்ச்சியில் ஈடுபடுத்தியுள்ளது. இப் பகுதிகளில் எண்ணெய் வளம் இருக்குமேயானுல் நாளடைவில் இந்த விலை அதிகரிப்பு மாறிவிடும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

மிளகாய் கொள்வனவில்

## கூ.மொ.வி.ஸ்தாபனத்துக்கு முக்கிய பங்கு

கோட்டை, திங்கள் நாட்டில் உற்பத்தியாகும் மிளகாய் பூராவும் கூட்டுறவுச் சங்கங்களால் கொள்வனவு செய்யப்படுகின்றதா என்பதை உறுதிசெய்யுமாறு கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்திற்கு விவசாய அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

கூ. மொ வி நிலையங்களும் கூட்டுறவுச் சங்கங்களும் மிளகாயை விவசாயிகளிடமிருந்துஇருத்தல் 3ரூபா 50 சதவீதம் கொள்வனவு செய்கின்றன எனவும் விவசாயிகள் தாங்கள் பயிர் செய்யுமிடத்திலிருந்து மிளகாயை மேற்படி சங்கங்களுக்குக் கொண்டு செல்ல கஷ்டப்படத் தேவையில்லை எனவும் அவர்களுக்கு வேண்டிய போக்குவரத்து வசதியை கூ மொ வி நிலையம் செய்துகொடுக்கும் எனவும் மேற்படி ஸ்தாபனத்தைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மிளகாய் உற்பத்தியாளர்கள் மிளகாயை மேற்படி நிலையங்களுக்குக் கொண்டு செல்ல வாகன வசதியை கூ மொ வி ஸ்தாபனம் செய்துகொடுக்கவுள்ளதோடு வாடகை வாகனங்களில் கொண்டுசெல்பவர்களுக்கு அவ்வாடகைச் செலவையும் செலுத்த மேற்படி ஸ்தாபனம்முன்வந்துள்ளது.

## வெங்காய இறக்குமதி அதிகரிக்கும்

கோட்டை, திங்கள் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் பம்பாய் வெங்காயம் இறக்குமதியை 20 வீதத்தால் அதிகரித்துள்ளது பம்பாய் வெங்காயம் தட்டுப்பாடு அடிக்கடியேற்படுவதை நீக்கு முகமாகவே இத்தாபனம் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

ஒருமாதத்துக்கு 10,000 தொன் பம்பாய் வெங்காயத்தை இறக்குமதி செய்ய ஸ்தாபனம் தீர்மானித்துள்ளது.

# வீதிகளில் விற்கப்படும் பன்றி இறைச்சியில் நச்சுத்தன்மை

## வியாபாரிகளை கைது செய்ய உத்தரவு

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாணத்தில் விற்கப்படும்காட்டுப் பன்றி இறைச்சியில் நச்சுத்தன்மை கலந்திருப்பதாகவும், அந்த இறைச்சியை வாங்கி உண்ண வேண்டாம் என்றும் யாழ் உணவுப் பரிசோதகர் திரு எஸ். ஏ. ஆனல் பொதுமக்களுக்குவிடுத்துள்ள வேண்டுகோள் ஒன்றில் தெரிவித்துள்ளார்

இந்தப் பன்றி இறைச்சியை வாங்கி உண்பவர்கள் அநேகர் வாந்தி, வயிற்றோட்டம் ஆகிய வியாதிகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டனர் என்றும் அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

உணவுப் பரிசோதகர் தமது வேண்டுகோளில் மேலும் கூறியுள்ளதாவது:-

இப்பன்றி இறைச்சியை கிளிநொச்சி, முள்ளைத்தீவு ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயிகள் கொண்டுவந்து யாழ்ப்பாண நகரில் விற்கிறார்கள். இவர்கள் தங்கள் பயிர்நிலங்களுக்கு அருகாமையில் உள்ள காடுகளில் திரியும் பண்டிகளைப் பிடிப்பதற்கு பொலிடோல் கலந்த மரவள்ளிக்கிழங்கு, உருளைக்கிழங்குஆகியவற்றைப்பயன்படுத்துகிறார்கள்நஞ்சுகலந்த உணவால் பன்றிகளது உடலிலும் நச்சுத்தன்மை கலந்து விடுகிறது. நச்சுத்தன்மையோடு கூடிய இந்த இறைச்சியை மேற்படி விவசாயிகள் யாழ்ப்பாணம் கொண்டுவந்து [illegible] கடை, ஆஸ்பத்திரிவீதி, மதுபானக்கடைக்கு எதிரிலுள்ள இடங்களிலும் வைத்துவிற்கிறார்கள்.

இந்த இறைச்சியை வாங்குவதை பொதுமக்கள் தவிர்க்கவேண்டும் இதை வாங்கி உண்ணுவதால் நோய் மட்டுமன்றி அபாயகரமான முடிவையும் எதிர்நோக்க வேண்டிநேரிடும்

உண்ணுவதற்கு தகுதியற்ற இந்த இறைச்சியை விற்பவர்களை கைதுசெய்யும் படியும் இறைச்சியை பறிமுதல் செய்யும்படியும் யாழ்ப்பாணம் மாநகரசபை வைத்திய அதிகாரி டாக்டர் [illegible] களும், உணவுப்பரிசோதகர்களும் ஆகியோருக்கு உத்தரவிட்டுள்ளார்.

காலவரையறையின்றி

## பாக். தேசிய சட்டசபை ஒத்திவைப்பு

கராச்சி, மார்ச் 1 டாக்காவில் புதன்கிழமை கூடவிருந்த பாகிஸ்தான் தேசிய சட்ட சபையின் கூட்டத்தை ஜனாதிபதி யாஹயாகான் திகதி குறிப்பிடாமல் ஒத்திப் போட்டுள்ளார்.

விசேஷ அறிவித்தல் மூலம் இச் செய்தியை கராச்சியிலிருந்து அவர் வெளியிட்டார்.

அவ்வறிக்கையில் மேலும், நாட்டின் சில தலைவர்கள் தங்கள் கொள்கையில் கடுத்தமான போக்குடையவர்களாய் இருந்துவருகின்றனர். இவர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தி புதிய அரசியல் சாசனத்தை உருவாக்க என் சக்தியுள்ளவரை முயற்சிப்பேன். தேசம் மிக மோசமான நிலையில் இருக்கிறது. இந்நிலையில் தலைவர்கள் நிதானத்துடன் நடந்து கொள்ள வேண்டும். எனக் கூறப்பட்டுள்ளது.

(முன்னைய செய்தியை 3-ம் பக்கம் பார்க்க)

இந்தியாவில்

## வாக்குச் சாவடிகளில்...

### இராகுகாலம்

சென்னை, மார்ச். 1 இந்தியாவின் 6வது பொதுத்தேர்தல் இன்று காலை எட்டுமணிக்கே ஆரம்பமாக விருந்ததாயினும் குறிப்பிட்ட 8 மணியளவில் இராகுகால மிருந்தமையால் பல வாக்குச் சாவடிகளில் 8 மணியளவில் கியூ வரிசை குறைவாக விருந்தது 9 மணிக்குப் பின்னர்தான் வாக்குப்போடுவோரின் எண்ணிக்கை அதிகரித்ததென்று தெரிவிக்கப்பட்டது

### யானையுடன் வாக்காளர்

சென்னையிலுள்ள சைதாப்பேட்டையில் வாக்காளர் ஒருவர் யானைக்குட்டியுடன் வாக்களிக்க வந்திருந்தார். யானையை அப்புறப்படுத்தும்படி தேர்தல் அதிகாரிகள் கேட்டுக் கொண்டதன் பேரில் பக்கத்திலுள்ள கோவில் ஒன்றில் ஆனையை

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணி சினிமா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி கணேஷன் - ஜெயலலிதா
நடித்த
## எங்கிருந்தோ வந்தாள்

இப்பொழுது நடைபெறுகிறது
## மனோகரா—யாழ்ப்பாணம்
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில்
நாலு காட்சிகள்



★ காந்தாராவ்
★ தேவிகா
★ பாலையா
★ லலிதா
முதலியோர் நடித்த
## சுகுண சுந்தரி

## யாழ். வின்ஸர்
தினசரி 4 காட்சிகள்
நடிகர் திலகமும் நாட்டியப் பேரொளியும்
சேர்ந்து நடிக்கும் வண்ணக் காவியம்
ஜெமினியின்
## விளையாட்டுப்பிள்ளை
(ஈஸ்மன் கலர்)
மற்றும் நடிகர்கள்
காஞ்சனா, சோ, மனோரமா, பாலையா.

7-வது வாரம்
## வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயாநாட்களில் 4 காட்சிகள்
கெமினிகலர்
(கோமுகுடு)
சிவாஜி
காஞ்சனா
எம். என். நம்பியார்
நாகேஷ்
முத்துராமன்
இன்னும் பலர் நடித்த





## சிவந்த மண்

## இன்றைய கிரிக்கெட்

யாழ்ப்பாணம், செவ். இன்று சென். பற்றிக்ஸ் கல்லூரியும் சென் ஜோன்ஸ் கல்லூரியும் சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் மோதுகின்றன.

இப்போட்டி சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றது.

யாழ். மத்திய கல்லூரியும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் இன்று சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் மோதுகின்றன.

இப்போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றது. (தே. நி)

## 14 வயது சிறுவனுக்கு 4வது தடவையாக பாம்பு தீண்டியதாம்

தாவடி, திங்கள்
கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த 14 வயதுச் சிறுவனொருவனுக்கு 14வது தடவையாகப் பாம்பு தீண்டிய சம்பவம் ஒன்று அண்மையில் நிகழ்ந்துள்ளது.

எவ்வளவோ கவனமாக இருந்தும்கூடப் பாம்பு தீண்டத் தவறுவதில்லை என்று அவனது பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
செவ்வாய் 2—3—71
(செய்திகள்: காலை 6-45 பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீ. அலை 61 மீ.
காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரை இசை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

844 மீ. அலை 49 மீ.
பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர் மேடை.

844 மீ. அலை 61 மீ.
மாலை 4-30 கல்வி ஒலிபரப்பு—ஜி. சி. ஈ. ஆங்கிலம் தமிழ் மூலம் சிங்களம், 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இசை நிகழ்ச்சி

இரவு 6-10 வாத்திய இசை, 6-15 நாட்டுப்பாடல் 6-30 கூட்டுறவு நிகழ்ச்சி, 7-00 பேச்சு 7-15 நாடகம், 7-45 மெல்லிசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 சித்திரம் 10-00 நேயர் விருப்பம், 10-30 செய்தித் தொகுப்பு

## நடவடிக்கை

வேலணை, திங்கள்
யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கு முள்ள தொலைபேசித் தொடர்புகளை செம்மைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் இலங்கையின் எல்லாப் பகுதி தபால் அலுவலகங்களிலும் தமிழில் முகவரி எழுதப்பட்ட பதிவுக்கடிதங்களை ஏற்று பதிவு செய்ய ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக தபால் தந்தி தொடர்பு அமைச்சர் தனக்குத் தெரிவித்துள்ளதாக தீவுப்பகுதி ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு. கா. பொ. இரத்தினம் தெரிவித்துள்ளார்.

## வரி விளம்பரம்

### தேவை
திண்டுக்கல் இரும்புப் பெட்டி 4'X3' அடி உடனே தேவை. விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். S. A சோமசுந்தரம், 180, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2467

### விற்பனைக்கு
புதிது போன்ற அசல் திண்டுக்கல் இரும்புப் பெட்டி ஒன்று 2 1/2' உயரமுள்ளது. உடன் விசாரிக்கவும். பவ்ஸி புவலேஸ், 74/1, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம். 2867

உங்களுக்குக் காது கேட்கவில்லையா? காது கேட்க உதவும் கருவி (Hearing Aids) எம்மிடம் இப்பொழுது விற்பனையாகின்றது. சீடிலிஸ் (யாழ்ப்பாணம்) லிமிட்டெட் 122, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2863

### கல்வி
மின்சார வேலை பற்றிய பாடங்கள் கற்க விபரங்களுக்கு எழுதுங்கள். ஆன்ரன், 53, டேவிட் வீதி, யாழ்ப்பாணம். 2865

### காணவில்லை
சென்ற சிவராத்திரியன்று (23-2-71) முருகன் சின்னன் என்பவர் நாடகம் பார்க்கச் சென்றவர் இன்றுவரை காணவில்லை. இவரைப் பற்றிய விபரம். வயது 80 மதிக்கத்தக்கவர், உயரம் 5 1/2 அடி, நிறம் கறுப்பு, கண் பார்வை ஒன்று குறைந்தவர். இவரின் சொந்தஇடம் புலோலி தெற்கு, புலோலி இவரைப் பற்றிய தகவல் கள் அறிந்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்திற்கு அறியத்தரவும். வ. கந்தசாமி, மருதங்கேணி, செம்பியன் பற்று. 2868

வீரகத்தி கந்தசாமி 20 2-71 தொடக்கம் காணவில்லை வயது 18, உயரம் 5 அடி. சிவப்பு நிறம். பச்சை சாரம், சேட் உடுத்திருந்தார். தகவல் தெரிவிப்பவருக்குத் தகுந்த சன்மானம் அளிக்கப்படும். ஆ. இலங்கைநாதன், நாதன் பூட்வெயர், கண்டி ரோட், கிளிநொச்சி. 2869

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி 6-30 9-30
போயா நாட்கள் 2-30
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
## தாமரை நெஞ்சம்

2-வது வாரம்
வெலிங்டன் சினிமா (?)
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
ஏ.வி.எம் ராஜன்-சாரதா
நடித்த
## துலாபாரம்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
ஜெமினி—பத்மினி
நடித்த
## எதிர்காலம்

REGAL Jaffna
Daily 4-45, 7 & 9-45 p m
Poya days 4 shows
Peter O'Toole,
Omar Sharif
in
THE NIGHT OF THE GENERALS
(Panavision-Color)

ராஜா—யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ ஜெய்சங்கர்
★ முத்துராமன்
★ சுந்தரராஜன்
நாகேஷ்—வி.கே.ராமசாமி
★ லெட்சுமி
★ நிர்மலா
★ ராதிகா
பேபி மைதிலி
மற்றும் பலர் திறம்பட நடித்த
சிறந்த ஹாஸ்ய சித்திரம்



## வீட்டுக்கு வீடு
(ஆ.ரி.ஆர். பிலிம்ஸ் வெளியீடு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய பொதுத்தேர்தல்

# பெருந்தலைவர்களின் தொகுதிகளில் சுறுசுறுப்பான வாக்களிப்பு

## அதிகாலை தொடக்கம் மக்கள் 'கியூ'வில்நின்றனர்

புதுடில்லி, மார்ச் 1

இந்தியாவின் 6-வது பொதுத் தேர்தலின் முதல் கட்டம் இன்று காலை அமைதியாக ஆரம்பித்தது.

இன்று வாக்குப் பதிவாகும் தொகுதிகளில் பிரதம மந்திரி இந்திராகாந்தி உட்பட பல அரசியல் கட்சித் தலைவர்கள் போட்டியிடும் தொகுதிகள் அடங்கியுள்ளன.

இந்தியாவிலுள்ள 18 மாநிலங்களுள் 9 மாநிலங்களிலும் இரண்டு எல்லையோர மாகாணங்களிலும் இன்று அதிகாலை லோகசபைக்கான வாக்குப்பதிவு ஆரம்பமாகியது. 518 லோக சபைத் தொகுதிகளில் 101 தொகுதிகளில் இன்று வாக்குப்பதிவு நடைபெறுகின்றது. 79 தொகுதிகளில் ஒரு பகுதியில் வாக்களிப்பு நடைபெறுகிறது. மொத்தமுள்ள இருபத்தேழரை கோடி வாக்காளரில் கிட்டத்தட்ட 7 கோடியே 30 லட்சம் வாக்காளர்கள் இன்று வாக்களிக்கின்றனர்.

வாக்குப்பதிவு ஆரம்பமாகியிருக்கும்தொகுதிகளில் பிரபல கட்சித் தலைவர்கள் போட்டியிடும் தொகுதிகளும் இருக்கின்றன. இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி, சிண்டிக்கேட் காங்கிரசைச் சேர்ந்த கே காமராஜர் மொரார்ஜிதேசாய். சுதந்திரா கட்சித் தலைவர் எம் ஆர் மசானி. ஜனசங் கட்சித் தலைவர் அட்டல்விகாரி வாச்பாய். காங்கிரஸ் தலைவர் ஜகஜீவன்ராம், டாக்டர் சாம் சுபாஸ்சிங் போன்ற பெருந்தலைவர்கள் போட்டியிடும் தொகுதிகளிலும் வாக்குப் பதிவுகள் மிகவும் சுறுசுறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஆண்களும். பெண்களுமாக வாக்குச் சாவடிகளில் நீண்ட கியூவரிசையில் தங்கள் வாக்குகளை அளிப்பதற்காக நீண்ட நேரம் காத்து நின்றனர் எங்கும் சுறுசுறுப்புடன் வாக்களிப்பு நடந்து கொண்டிருந்தது. பொலிசார் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். வாக்களிப்பு நிலையங்களில் பொலிசார் கடமைபுரிவதோடு எதுவித அசம்பாவிதங்களும் ஏற்படாமல் ஆயுதம் தாங்கிய பொலிசார் வீதிகளில் ரோந்து சுற்றிவருகின்றனர்.

### தமிழ் நாட்டில்

தமிழ் நாட்டில் 78 சட்ட சபைத் தொகுதிகளுக்கும், 13 லோகசபைத் தொகுதிகளுக்கும் இன்றுகாலை 8மணிக்கு வாக்குப் பதிவு ஆரம்பமாகியது.

முதலமைச்சர் மு. கருணாநிதி உட்பட பல அமைச்சர்களின் தொகுதிகளில் இன்று வாக்குப் பதிவு ஆரம்பமாகியுள்ளது. மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்த வண்ணமிருக்கின்றனர்.

......

### தியத்தலாவை சென்றனர்

பருத்தித்துறை, திங்கள்

தியத்தலாவையில் நடைபெறவிருக்கும் வருடாந்தப் பாசறைக்கென பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் ஆகிய கல்லூரிகளிலிருந்து மாணவ கடற்படையினர் நேற்றுமாலை புறப்பட்டனர். இவர்களுக்கான பயிற்சி வகுப்புகள் ஒருவாரகாலம் நடைபெறுமெனத் தெரிகிறது.

மேற்கு வங்காளத்தில்

## அமைதியாகத் தேர்தல் நடக்குமா?

மேற்கு வங்காளத்தில் வன்முறைகள் அதிகமாகிக் கொண்டு வரும் நிலையில் தேர்தல் அமைதியுடன் நடைபெறுமா என்ற ஐயம் பலர் மத்தியில் தோன்றியுள்ளது. இது பற்றி அறிவதற்காக இந்தியத் தேர்தல் கமிஷனர் திரு. சென்வர்மாவை பத்திரிகையாளர் பேட்டி கண்டனர்.

மேற்கு வங்காளத்தில் வன்முறைச் சம்பவம் நடப்பது புதியதல்ல, இதற்கு முன்பும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. இப்பகுதியில் நேர்மையான முறையிலும் அமைதியான முறையிலும் தேர்தல் நடத்தி முடிக்கலாமென்றே நம்புகின்றேன் என்று திரு. சென்வர்மா பத்திரிகையாளரின் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு மத்திய அரசாங்கத்தையும் ராஜ்ய அரசாங்கங்களையும் பொறுத்த விசயமாகும். அவர்கள் தேர்தலை அமைதியாகவும் ஒழுங்குக் கட்டுப்பாட்டுடனும் நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதி அளித்துள்ளனர் என்றார்.

### வங்காளத்தில் மாணவர் கைது

மேற்கு வங்காளத்திலுள்ள பல்கலைக்கழகமொன்றில் பொலிசார் சோதனையிட்டதில் எறிகுண்டுகள். வெடிமருந்துப் பொருட்கள் இயந்திரதுப்பாக்கிகள் பெருமளவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அண்மைக் காலத்தில் இதுபோன்று பெருமளவில் கைப்பற்றப் படவில்லை எனப் பொலிசார் தெரிவித்தனர்,

பொலிசார் மீது மாணவர்கள் கைக்குண்டெறிந்ததைத் தொடர்ந்து பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இக்கலகத்தைத் தொடர்ந்து 100 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

எந்தக்கட்சி பதவிக்கு வரும்?

## நிச்சயமாகச் சொல்லமுடியாதாம்

யாழ்ப்பாணம், செவ்.

திராவிடமுன்னேற்ற கழகத்திற்கு பழைய செல்வாக்கு இன்று இல்லை. இந்த நிலையில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வரும் என்று நிச்சயமாக சொல்ல முடியாது.

தமிழ் நாட்டிற்கு தேர்தல் நிலவரங்களை பார்வையிடுவதற்காக அண்மையில் தமிழ் நாடு சென்று திரும்பிய கோப்பாய் கிராமசபைத் தலைவர் திரு. ரி.பரமானந்தராசா மேற்கண்டவாறு கூறினார்.

திரு பரமானந்தராசா மேலும் கூறியதாவது: கடந்த தேர்தலில் மக்கள் மாற்றத்தை விரும்பியதால் தி. மு. க. பதவிக்குவந்தது. இம்முறையும் மக்கள் மாற்றத்தை விரும்புகின்றார்கள். கடுமையான போட்டியென்றபடியால்தான் எம் ஜி ராமச்சந்திரனும் மற்றும் தி மு கழகதலைவர்களும், இரவுபகலாக கிராமம் கிராமமாக தேர்தல் பிரசாரம் செய்து வருகின்றனர்.

தமிழ் நாட்டின் பல இடங்களுக்கும் சென்று சகல கட்சிக்கூட்டங்களையும் பார்த்துவிட்டுத்தான் என் கருத்தை கூறுகின்றேன். தமிழ் நாட்டில் பலதரப்பட்ட மக்களையும், தொழிலாளர்தலைவர்களையும் சந்தித்தேன் எல்லாரும் மாற்றத்தை விரும்புகிறார்கள் என்பதை அறிந்து கொண்டேன்.

இதுவரை என்றும் இல்லாதவாறு மக்களிடையே உற்சாகத்தையும் உணர்ச்சியையும் காணக் கூடியதாக இருக்கிறது. சின்டிக்கேட் கூட்டமானாலும்சரி, தி.மு.க கூட்டமானாலும்சரி மக்கள் பெருந்திரளாக செல்லுகின்றனர். எந்தக் கட்சி ஆட்சிக்குவரும் என்பதை நிச்சயமாக சொல்லமுடியாது.

நிபந்தனையை ஏற்காவிடில்

## மேற்குப் பாகிஸ்தானில் கிளர்ச்சி நடத்துவாராம்

### பூட்டோ எச்சரிக்கை

ராவல்பிண்டி, மார்ச் 1

புதன்கிழமை டாக்காவில் கூடவிருக்கும் பாகிஸ்தான் தேசிய சட்டசபை கூட்டம் தமது கட்சி இன்றி நடக்குமானல் மேற்குப் பாகிஸ்தானில் கிளர்ச்சி நடத்தப் போவதாக மக்கள் கட்சித் தலைவர் சுல்பிகார் அலி பூட்டோ இன்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கு முன்பாக திரு. பூட்டோ அவாமி லீக்கட்சித் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மானுக்கும் தமக்கும் புதிய அரசியல் அமைப்புப்பற்றிய விஷயத்தில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாட்டை நீக்க மேலும் ரஹ்மானுடன் பேச்சுவார்த்தை நடத்த அவகாசம் ஏற்படுத்தும் வகையில் தேசிய சட்டசபை கூடும் திகதியை ஒத்திப் போடுமாறும், அல்லது தேசிய சட்டசபை கூடிய 140 நாட்களுக்குள் புதிய அரசியல் சாசனத்தைத் தயாரித்துவிட வேண்டுமென்ற விதியை இல்லாமலாக்க வேண்டுமென்றும் கோரியிருந்தார். இக்கோரிக்கையிலெதையாவது செய்தால் தமது கட்சி புதன் கிழமை கூடும் தேசியசட்டசபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமென்று அவர் தெரிவித்தார்.

மேலும் இந்தக் கோரிக்கையில் எதையாவது நிறைவேற்றுமல் தேசிய சட்டசபை கூடுமானல், மேற்குப் பாகிஸ்தான் முழுவதும் ஓர் கிளர்ச்சியை நடத்தப் போவதாக அவர் எச்சரித்துள்ளார்.

இதே நேரத்தில் அவாமி லீக் தலைவர் சேக் முஜிபுர் ரஹ்மான் மேற்கு பாகிஸ்தான் உறுப்பினர்களுக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார், டாக்காவிலிருந்து வெளியிடப்பட்ட வேண்டுகோளை பாகிஸ்தானுக்குரிய புதிய அரசியல் திட்டத்தை உருவாக்குவதற்கு தன்னுடன் மேற்குப் பாகிஸ்தான் உறுப்பினர்களை ஒத்துழைக்குமாறு கேட்டுள்ளார். மேலும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: அவாமி லீக் கட்சியினுல் முன் வைக்கப்பட்ட 6 அம்சத் திட்டத்தினுல் கிழக்குப் பாகிஸ்தான் மட்டுமல்ல மேற்குப் பாகிஸ்தானும் நன்மை அடையும். எனது கட்சி ஆட்சிப் பொறுப்புக்கு வருமானல் பாகிஸ்தானிலுள்ள வங்கிகள் இன்ஸ்சூரன்ஸ் கம்பனிகள் யாவும் தேசிய மயமாக்கப்படும். வெளிவர்த்தகம் மற்றுமுள்ள வெளிவிஷயங்கள் புதிய அரசியல் திட்டத்தில் மாகாண விஷயங்களாக இருக்க வேண்டுமென்பதே எமது கட்சியின் கொள்கையாகும் என்றார்.

— —

### இலட்சார்ச்சனை

சுழிபுரம், திங்கள்

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் இலட்சார்ச்சனை இன்று தொடக்கம் ஆரம்பமாகி 9-3-71 செவ்வாய்க்கிழமைவரை நடைபெறவுள்ளது. இறுதிநாளன்று சங்காபிஷேகமும் சுவாமி வீதிவலம் வருதலும் நடைபெறும்பதினொராவது நாள் திருவடி நிலையில் தீர்த்தோற்சவம் நடைபெறும்.

ரயில் விபத்தில்

### 40 பேர் காயமடைந்தனர்

சென்னை, மார்ச் 1

விஜயவாடாவுக்கு பக்கத்தே நேற்று முன் தினம் நடைபெற்ற ரயில்விபத்தொன்றில் 40 பேர் கடுங்காயமடைந்து விஜயவாடா ரயில்வே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சென்னையில் இருந்து ஹவுராவுக்குப் புறப்பட்டுச் சென்ற மெயில் வண்டி சாமான் ரயில் ஒன்றுடன் மோதியதால் தடம்புரண்டது. என்ஜின் உட்பட 3 பெட்டிகள் பாதையைவிட்டு விலகிவிட்டன. இவ்விபத்தில் 40 பேரே கடுங்காயம் அடைந்துள்ளனர். பலருக்குச் சிறுகாயம் ஏற்பட்டது.

### அடுத்தவாரம் மக்கள் சபையில் விவாதம்

லண்டன், மார்ச் 1

தென் ஆபிரிக்காவுக்கு ஹெலிகாப்டர்கள் வழங்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முடிவு பற்றி அடுத்தவாரம் மக்கள் சபையில் வான விரிவான விவாதம் நடைபெறவிருக்கிறது.

கடந்த 22-ந் திகதி வெளிவிவகார சாம்ராஜ்ய மந்திரி சேர். அலெக்ஸ் டொக்ளஸ் ஹியூம் மக்கள் சபையில் விடுத்த அறிக்கையை அடுத்து எதிர்க்கட்சியினர் சமர்ப்பித்த பிரேரணைக்கு இணங்கவே இவ்விவாதம் நடைபெறவிருக்கிறது. தென் ஆபிரிக்க அரசாங்கம் கோரிக்கை விடுத்தால் ஹெலிகாப்டர்களை வழங்குவதற்கான ஏற்றுமதி லைசென்ஸுகள் அனுமதிக்கப்படுமென சேர். ஹியூம்கூறினர்.

இவ்விவாதத்தின் போது அரசாங்கம் தனது நிலையை விளக்குவதுடன் ஒப்பந்தக் கட்டுப்பாட்டின் கீழ் குறிப்பிட்ட சில யுத்த தளபாடங்கள் மட்டுமே தென்ஆபிரிக்காவுக்கு வழங்கப்படுமென்பதையும் தெளிவுபடுத்தும் இது இவ்வாறிருக்க பாரசீகக் குடா பிராந்தியத்தில் பிரிட்டனின் எதிர்காலக் கொள்கை பற்றி இன்றுவிவாதம் ஆரம்பிப்பதற்கு முன்பாக சேர். ஹியூம் மக்கள் சபையில் அறிக்கை ஒன்றை விடுப்பார்.

உலக விவகாரங்களில் பிரிட்டனின் எதிர்காலத் திட்டம் பற்றி விளக்கப்படவிருப்பதால் இவ்விதம் சர்வதேச அக்கறையைக் கவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

"ஞானியின் உடைய னிந்துள்ள அரசியல்வாதி யல்லேன். ஆனல் ஆன்மீகமும் அரசியலும் ஞானம் ...லின், சிலசமயம் என் செயல்களோ அனைத்திலும் உயர்ந்த அரசியலுக்குப் பொருந்த மாகத் தோன்றுகின்றன.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் மாசி மாதம் 17ந் திகதி (2-3-71)


## சுத்தமும் சுகாதாரமும்

வீடும் வளவும் சுத்தமாக இருந்தால் நாடும் நகரமும் சுத்தமாகிவிடும் என்று பொதுவாகச் சொல்வதுண்டு ஆனல் வீட்டையும் வளவையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்பதற்காக குப்பைகளைத் தெருக்களிலும் அரசாங்கத்துக்குச் சொந்தமான பொது இடங்களிலும் கொட்டி நிரப்புவது சரியல்ல

இவைகளைக் கவனிக்க வேண்டிய அரசாங்கத்தினதும் உள்ளூராட்சிமன்றங்களினதும் பொறுப்பு என்று பொதுமக்களில் அநேகர் அசமந்தமாகஇருந்துவிடுகின்றனர். பொதுமக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் எதுவுமே வெற்றிபெற முடியாது.

சிலர் தம் வளவு சுத்தமாக இருக்கவேண்டுமென்பதற்காக குப்பைகளை அடுத்த வளவுகளில் யாருக்கும் தெரியாமல் கொட்டி விடுகிறார்கள்.

என்னதான் நம்வீடு சுத்தமாய் இருந்தாலும் தொற்று நோய்கள் பரவுவதற்கு சுற்று வளவுகள் சுகாதாரமற்றிருப்பதுவும் ஒரு காரணமென்பதை இவர்கள் உணர்வதில்லை.

வீடுகளில் வாடகைக்கு இருக்கும் அநேகர் வீட்டுவளவுகளின் சுத்தம் பற்றி அக்கறைகொள்வதில்லை இது நமக்குச் சொந்தமில்லைதானே என்ற அலட்சியப் போக்குடன் இருந்துவிடுகிருர்கள் அநேகமாக வட கைக்கவிடும் சொந்தக்காரர்களிலும் சிலர் இது பற்றி அக்கறை கொள்கிருர்கள் இல்லை.

குப்பைகள் கொட்டி நிரப்பப்படுவது போக மல கூடங்கள், குடிநீர் கிணறுகள் போன்றனவும் பல இடங்களிலும் மோசமாக இருக்கக் காண்கிறோம்.

இவை அனைத்தையும் அதிகாரிகளே நேரில் பார்த்து ஆவனசெய்துகொண்டிருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அரசாங்கமும், உள்ளூராட்சிமன்றங்களும் எந்த நன்நோக்கோடு சட்டங்களை இயற்றுகிறார்களோ அதே உணர்ச்சியுடன் அதிகாரிகளும் பணியாற்றுவார்கள் என்றுதான் எதிர்பார்க்கப்படுகின்றது ஆனல் நடைமுறையில இது பொதுவாகச் சாத்தியமாவதில்லை. இதற்கு பொதுமக்களின் அசமந்தப்போக்கே காரணம்.

வீடுவளவுகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவும், பொது இடங்களை அசுத்தமாக்காமலும் இருப்பதற்குப் பொதுமக்கள் எவ்வளவு தூரம் கவனமெடுக்கிறார்களோ அந்த அளவுக்கு நாடும், நகரமும், வீடும் வாசலும் சுத்தமாகும். நோய்நொடிகள் பரவாமலும் தடுக்கமுடியும்.

வல்வையில்

## உரிமைகளை பெறும் உயர்ந்த நோக்குடன் ஒன்றுபட்டோம்

**சாவகச்சேரி எம். பி.**

சுழிபுரம், திங்கள்

"தமிழ் பேசும் மக்களின் மொழியுரிமை குடியுரிமை இரண்டையும் நிர்மாணிக்கக்கூடிய சிறந்த அரசியல் அமைப்பை உருவாக்கவேண்டும் என்ற உயர்ந்த நோக்குடனேயே எம்மிடையே இருந்தகருத்து வேற்றுமையை மறந்து வல்வையில் ஒன்றுபட்டுள்ளோம். புதிய அரசியல்நிர்ணய சபையின் அமைப்பிலேயே எமது எதிர்காலம் தங்கியுள்ளது. கடந்தகாலத்தில் இந்த நாட்டிலுள்ள அரசியல் அமைப்பு விதிகளினாலே தமிழினம் பாதிக்கப்பட்டதை யாவரும் அறிவர். அப்படியான நிலைமைமேலும் ஏற்படக்கூடாது

இவ்வாறு சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக்கழகத்தினரால்நடாத்தப்பட்ட கருத்தரங்கில் கலந்து தமிழரும் அரசியல் நிர்ணய சபையும் என்னும் பொருள்பற்றி உரையாற்றிய சாவகச்சேரி எம் பி திரு. வ ந நவரத்தினம் தெரிவித்தார். கருத்தரங்கிற்கு கழகத்தலைவர் செல்வன் தெ. விக்னேஸ்வரன் தலைமை வகித்தார்.

திரு. வ. ந. நவரத்தினம் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:-

ஆசைவார்த்தைகளால் மக்களை தம்பக்கம் ஆக்க வாம் என சில நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தமிழ்ப்பேசும் மக்கள் வேண்டுவது சமஉரிமையே. பத்திரிகையில் வெளியாகும் தனிமனிதர்கள் கருத்துக்கள் என்றும் நிலைபெறப் போவதில்லை. அண்மையில் ஆட்சிமன்றத்தில் கேட்கப்பட்ட சில கேள்விகளுக்கு கிடைத்த பதில்கள் எமக்கு பெரும் வியப்பையும் ஆச்சரியத்தையும் கொடுக்கின்றன. தனி அரசன் எப்படியும் நாட்டை ஆட்சி செய்யலாம். ஆனுல் குடியரசாக நடைபெறும்போதுதான் அரசியல் வரம்பு தேவையாகும். அவ்வரம்பைஆக்குவதில் நாம் நன்கு கவனம் செலுத்தவேண்டும்.

### கல்விநிலை பாதிக்கிறதாம்

வேலணை, திங்கள்

ஊர்காவற்றுறைத் தொகுதியிலிருந்து பிற இடங்களுக்கு ஆசிரியர்களை மாற்றம் செய்யுமுன் அவ்விடங்களுக்கு ஆசிரியர்களை நியமிக்குமாறு பல முறை கேட்டிருந்தும் நியமனமின்றியே ஆசிரியர்கள் மாற்றப் படுவதாகவும் இதனுல் ஆசிரியர் பற்றுக்குறையுள்ள தீவுப்பகுதியின் கல்வி நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் தீவுப்பகுதி எம்.பி. பண்டிதர் இரத்தினம் கல்வி இலாகா டைரக்டருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இன்று ஆய்வு கூடத்திறப்புவிழா

## கோண்டாவில் சைவத்தமிழ் சாதனுவித்தியாலயம்

ஆங்கிலேய ஆட்சியின் போது இலங்கை மக்களுக் குத்திட்டமிடப்பட்ட கல்வி அமைப்பு புகுத்தப்பட்ட காலத்தில் கோண்டாவில் சைவத்தமிழ் சாதனு வித்தியாலயம் பிரம்மஸ்ரீ முருகேசையர் வெங்கடாசல ஐயரால் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வித்தியாலயத்தில் கொக்குவில், தாவடி, இணுவில் ஆகிய கிராமங்களிலிருந்து பிள்ளைகள் வந்துகல்வி கற்றனர். ஐயர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டதினுல் அன்று தொடக்கம் இன்று வரை சிறுபிள்ளைதொடக்கம் முதியோர்வரை ஐயர்பள்ளிக்கூடம் என்று இது எல்லாராலும் அழைக்கப்பட்டு வருகின்றது இன்னும் ஒரு சில ஆண்டுகளில் இவ்வித்தியாலயம் தனது நூறுவது ஆண்டு விழாவைக் கொண்டாடவிருக்கும் நேரத்தில் ஆட்சிமன்ற சபாநாயகர் திரு ஸ்ரான்லி திலகரத்தின புதிய விஞ்ஞான ஆய்வுகூடத்தை இன்று திறந்து வைப்பது இவ்வித்தியாலயத்தின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இவ்வித்தியாலயத்தில்கலை சங்கீதம்நெசவு பன்னவேலை போன்றபாடங்களை மாணவருக்குக் கற்பிப்பதற்கு விசேடபயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நியமனம் பெற்றுள்ளார்கள். மின்சாரம் குழாய் நீர் வசதி போன்ற வசதிகளும் இருந்தும் விஞ்ஞானக் கல்வியை கல்வியை இப்பகுதிப் பிள்ளைகளுக்கு அளிப்பதில் உள்ள கஷ்ட நிலைகளை காலத்திற்குக் காலம் வித்தியாபகுதிக்குப் பெற்றோர்ஆசிரியர்சங்கமும் தலைமை ஆசிரியரும் எடுத்துரைத்ததன் விளைவாக 1970-ம் ஆண்டு ஜூலை மாதம் 9500 ரூபாபெறுமதியிலான ஒரு கட்டிடம் கட்டுவதற்கு வித்தியாபகுதியினரின் அங்கீகாரம் கிடைத்தது இப்பணத்துடன் பெற்றோர் ஆசிரிய சங்கத்தின் முயற்சியினுல் கிடைத்த 2000 ரூபாவுடன் இக்கட்டிடத்தைப் பூர்த்தி செய்து ஏற்கெனவே வித்தியாபகுதியினரினுல் அனுப்பி வைக்கப்பட்ட விஞ்ஞான உபகரணங்களுடன் இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சியில் அக்கறையுடைய சபாநாயர் திரு. ஸ்ரான்லி திலகரத்தினவினுல் இன்று திறந்து வைக்கப்படுவது இப்பகுதி மக்களுக்குப் பெருமை தருவதாகும்.

நீண்டகாலமாகவிஞ்ஞான ஆய்வுகூடம் இல்லாத பெருங்குறை இன்று நீங்குவதில் இப்பகுதி மக்கள் பேருவகை கொள்கிருர்கள்.

மு. வாமதேவன்
(பழைய மாணவன்)

## இணுவில் வித்தியாசாலையில் இன்று அடிக்கல் நாட்டுவிழா

யாழ்ப்பாணம், செவ்.

இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை விஞ்ஞான ஆய்வு கூடத்துக்கான கல் நாட்டு விழா இன்று மாலை வடமாநில அரசாங்க அதிபர் திரு. ரி. விமால் அமரசேகரா தலைமையில் நடைபெறவிருக்கிறது, இக்கட்டிடத்திற்கான அடிக்கல்லை சபாநாயகர் ஸ்ரான்லி திலகரத்தின நாட்டுவார், வட பிரதேச வித்தியாதிபதிதிரு. டபிள்யு டி. சி. மகாதந்தலை குத்துவிளக்கேற்றி வைப்பார்.

இக்கல் நாட்டு விழாவுக்கு முன்பாக இணுவில் கந்தசாமி கோவில் சந்தியிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகி வித்தியாலயத்திற்கு வந்து சேரும்.

கல்கிபீடி உரிமையாளர் திரு சி சின்னத்துரை விழாத் தலைவராவார். இவ்விழாவில் உதவி அரசாங்க அதிபர் தி முருகேசம்பிள்ளை, அ இ கூட்டுறவுச் சம்மேளனத் தலைவர் எல் எம் வி டி சில்வா, சி அருளம்பலம் எம் பி, திரு எம் சி சுப்பிரமணியம், சுன்னுகம் பட்டின சபைத் தலைவர் பொ நாகலிங்கம், உடுவில் கிராமசபை தலைவர் ச முத்துலிங்கம், தர்மலிங்கம் எம் பி, அ இ கிராமச்சபைகளின் சம்மேளனத் தலைவர் வ பொன்னம்பலம், உடுவில் வட்டாரக் கல்வி அதிகாரி எஸ் இராசா ஆகியோர் வாழ்த்துரை வழங்கவிருக்கிருர்கள்.

காலஞ்சென்ற அரும் பெருந் தொண்டரும் புலவருமாகிய திரு. பொ. அம்பிகைபாகன் உபாத்தியாயர் அவர்களால் 1864-ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இப் பாடசாலையை 1870-ம் ஆண்டு அரசினரால் அங்கீகரிக்கப்பட்டது, பல நல்லாசிரியர்களினதும், இப்பகுதி மக்களினதும் ஆதரவில் இப்பாடசாலை மேன்மேலும் வளர்ச்சி அடைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

சாலைக்கான அடிக்கல்லை இன்று காலை 10-30மணிக்கு ஆட்சி மன்றச் சபாநாயகர் திரு ஸ்ரான்லி திலகரத்தின நாட்டிவைப்பார்.

மயிலிட்டி கிராமசபைத் தலைவர் திரு கே ரி இராஜதுரை தலைமையில் நிகழும் இவ்விழாவில் காங்கேசன்துறை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு எஸ் ஜே வி செல்வநாயகம் வலி வடக்குக் காரியாதிகாரி திரு பி எஸ் பற்றிக்ஸ், நியமன உறுப்பினர் திரு எம் ஸி சுப்பிரமணியம் வட்டுக்கோட்டை எம் பி திரு ஆ தியாகராசா, வடமாநிலக் கல்வியதிகாரி திரு. சி மகாதேவ யாழ் அரசாங்கஅதிபர் திரு விமல் அமரசேகரா திரு வி பொன்னம்பலம் உட்படப்பலர் உரையாற்றுவார்கள்.

பலாலியில்

மாவிட்டபுரம், திங்கள்

பலாலி அரசினர் பாட

### பாலைதீவு திருநாள்

யாழ்ப்பாணம், செவ்.

பாலைதீவு அர்ச்சிய சிஷ்ட அந்தோனியார் தேவாலய வருடாந்த உற்சவம் இம் மாதம் 14-ம் திகதி கொண்டாடப்படவுள்ளது திருநாளுக்கு ஆயத்தமானநவநாள் இம்மாதம் 11ம் திகதி ஆரம்பமாகிறது

# ஒற்றைத் த... மனநிலை ச...

இவ்நவீன விஞ்ஞான உலகில் மனிதரை ஆட்டிவைக்கும் வியாதிகள் பல. அவற்றுள் 'மைகிரேன்' என்னும் தலைவலியும் ஒன்று என்பதும் பலருக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணலாம். ஆனுல் இது உண்மையே! 'பூ தலைவலியா? அதுவும் ஒரு வியாதியா என்று உங்களில் பலர் வெகு அசிரத்தையாகக் கேட்கக்கூடும். 'மைகிரேன்' என்னும் தலைவலியை உண்மையில் அனுபவித்தவர்களே இதன் உபத்திரவத்தை நன்கறிவர்.

'மைகிரேன்' என்ற சொல் 'பாதித்தலை' என்ற பொருள்படவுள்ள கிரேக்க பதத்திலிருந்து வருகிறது. இத்தலைவலி அதிகமாக, ஒருவரின் பாதித்தலையையே முழுமையாகப் பாதிக்கிறது. தலையின் ஒருபக்கம், நடுநெற்றியிலிருந்து நேர்கோடு வரைந்தாற்போல் ஒரு புறம் முழுவதும் இடிக்கிறது, துடிக்கிறது. கொந்தளிக்கிறது. தலையில் மறுபாதியோ இதைச் சும்மா இருந்து கவனித்து வருகிறது. இந்தத் தலைவலியால் அவதிப்படுவோருக்கே அதனுல் உண்டாகும் வேதனை எவ்வளவு பொறுக்கமுடியாதது என்பது தெரியும்.

உலகில் பத்துப் பேர்களில் ஒருவருக்கு இந்தத் தீராத் தலைவலி வருகிறதென்றாலும் இது ஏன் ஏற்படுகிறது. இதனை எப்படித் தீர்ப்பதென்பது முழுமையாகத் தெரியாததொருவிஷயமாகவே இருந்துவருகிறது.

வைத்திய நிபுணர்களும், உடலியல் விஞ்ஞானிகளும் இத்தலைவலியின் மூலகாரணத்தை அறிந்துவிடும் நோக்கத்துடன் பலஆராய்ச்சிகளை மேற்கொண்டு வந்திருக்கின்றனர். பல சிகிச்சை முறைகளையும் கண்டுபிடித்திருக்கின்றனர் இருப்பினும் மைகிரேன் தலைவலி ஏற்படும் விதமும், அது பாதிக்கும் விதமும், ஒவ்வொரு நோயாளியைப் பொறுத்த மட்டில் மாறுபடுவதால் இச்சிகிச்சை முறைகள் எதிர்பார்த்தளவு பலனை அளிக்கவில்லை என்றே கூறவேண்டும். மேலும் வைத்தியர்கள் கையாண்ட சிகிச்சை முறைகள் பெரும்பாலானவை, தலைவலியின் வேதனையைக் குறைக்கும் போதை மருந்துகளாகவே இருந்தன. தலைவலியைத் தற்காலிகமாக போதை மருந்துகளுண்டு, அல்லது துயிலச் செய்யும் மருந்துண்டு. நிறுத்துவது சுலபம். ஆனுல் நோயாளிகள் விரும்புவது இக்கொடிய தீராத வேதனைதரும் தலைவலியில் இருந்து நிரந்தரமாக விடுபடுவதையே!

நிரந்தர குணமேற்படுத்தும் சிகிச்சையில், வைத்திய நிபுணர்களைவிட மனோதத்துவ நிபுணர்கள் இங்கு பெரும் வெற்றியீட்டியிருக்கிருர்கள் என்றே சொல்லவேண்டும். இத்தலைவலியைஎப்படிக் குணப்படுத்துவது என்ற ஆராய்ச்சியில் அவர்கள் இறங்காமல் இவ்வியாதி ஏற்படுத்துவதற்கான காரணம் என்ன? உடல் இயக்கத்தில் இவ்வியாதி ஏற்பட்டதும் வரும் மாறுதல்கள் என்ன? நோயாளி வாழும் சூழல், அவரது வாழ்க்கைமுறை, தலைவலியின் அறிகுறிகள் தென்படுவதற்குச் சுணநேரமுதல் அவருக்கு ஏற்பட்ட மனத்தாக்கங்கள்பற்றிய விரிவான ஆராய்ச்சி செய்தவர் இவ்வுளவியல் நிபுணர்.

எமது உடலில் இரத்தோட்டம் நரம்பு மண்டல மூலம், [illegible]யும், [illegible] தடையின்றி இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. மயிரிழைபோன்ற நரம்புகள் மூலமாக எம் உடலில் இரத்தம் சென்று, எம்மை வாழ வைக்கிறது. ஆனுல் ஏதாவதொரு மனத்தாக்கம் ஏற்பட்டவுடன் மூளைக்கு இரத்தத்தைக் கொண்டுசெல்லும்

இன்று தொடக்கம் இ...
அனைத்தும் கொண்டாடு...

# நாவலர்...

— பண்டி...

இந்தநாடு உய்யும்படி அ... தரித்த ஆறுமுக நாவல... பெருமான் கூற்றுக்க... இவை;

(i) "எத்துணைக் கால... திருப்பித்திருப்பிப் படி... பினும் கேட்பினும் எட்... ணையுந் தெவிட்டாது தி... தித்து அமுதூறும் அத்... யற்புத அதிமதுரத்திவ் வி... வாக்காகிய கந்தபுராணம்...

(ii) இந்தக் கந்தபுரா...ணத்தை விதிப்படிமெய்ய... போடு நியமமாகக் கேட்... பவர்கள், நோய்நீக்க... செல்வம், புத்திரபாக்கிய... சத்துருஜயம் இராசவசிய... முதலிய பயன்களைத் தா... தாம் வேண்டியவாறே பெ... வார்கள் இது நெடுங்கால... பலராலும் அநுபவத்தினு... நிச்சயித்துணரப்பட்ட வி...யம். இது சத்தியம் ச... யம்; முக்காலுஞ்சத்தியம்...

இது நாவலர் பெருமா... கருத்து! இந்த நாட்டுக்... வந்த வருகின்ற இடையூ... களினின்றும் சைவத்தைய... தமிழையும் பாதுகாத்... வைத்தது; வைக்கின்ற... கந்தபுராணம்.

அப்பெருமான் மனம் ... த்து வாழ்த்திய வாழ்... இது: "கச்சியப்பசி... சாரிய சுவாமிகள் திரு... வாழ்க"

கந்தபுராணம் ஒரு கற்... தரு அது வேண்டுவதை ... தக் காலத்திலும் ஈத... ஆயத்தமாயிருக்கிறது.

விலங்கு நிலையிலிருந்... மனிதனை மனிதனுக்கி ... தர்களுக்குமேலே தே...


உங்கள் பிரதிக்கு இப்போதே
ஒழுங்குசெய்து கொள்ளுங்கள்!
'ஈழநாடு'
நாவல் போட்டியில் முதற்பரிசு பெற்ற
க. இராஜநாயகன்
எழுதிய
"பிரயாணி"
18-3-71ல் ஆரம்பமாகின்றது.
உணர்ச்சியோட்டமும் உள்ளாக்கமும் நிறைந்த [illegible]யத்தின் அடித்தளத்தை படம் பிடிக்கும் உயரிய நாவல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ந் தலைவலிக்கு ...ல் காரணமா?

தையே! ...ணமேற்படுத் ...ல், வைத்திய ... மனோதத் ...ள் இங்கு ...றியீட்டியிருக் ...றே சொல்ல ... இத்தலை ... குணப்படுத் ...ஆராய்ச்சியில் ...ளாமல் இவ் ...படுத்துவதற் ...என்ன? உடல் ... இவ்வியாதி ...வரும் மாறு ... நோயாளி ..., அவரது ..., தலைவலி ... தென்படு ...ணநேரமுதல் ...ட்ட மனத் ...ய விரிவான ...ய்தவர் இவ் ...ளர்.

...லில் இரத் ...ம்பு மண்டல ...டியும், ...ங்கு ...டம்பெறுக் ...து. மயி ... நரம்புகள் ...டலில் இரத் ...ம்மை வாழ ...ணல் ஏதா ...தாக்கம் ஏற் ...ளைக்கு இரத் ...டுசெல்லும்

நரம்புகள் ஒரு ஷணநேரம் தம் வேலையை மறந்து, விறைத்துப் நின்றுவிடுகின்றன. கண்மூடித்திறக்கும் ஷணநேரத்துக்குள் நரம்புகள் விறைத்துப் பின் மறுபடியும் தம் வேலையைச் செய்யத் தொடங்கிவிடுகின்றன, ஆனாலும் இந்த ஷணநேர நரம்பு விறைப்புத்தான் மகிரேன் தலைவலியின்மூல காரணம் என நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கின்றார்கள்

இதை மனதிற் கொண்டு தான், மனோதத்துவ வைத்தியர்கள், தலைவலிக்கு உடனடியாக மருந்து கொடுக்க முற்பட்டால், நோயாளியின் குடும்பச் சூழல், அவரது மனக்கவலைகள், தலைவலியின் முதல் அறிகுறி ஏற்படுவதற்கு முன் நடந்த சம்பவங்கள் அதிர்ச்சி தரும்செய்திகள், போன்றவற்றை, மிக மிக நுணுக்கமாகக்கேட்டு அறிந்துகொள்கிறார்கள். பின் ஒவ்வொரு நோயாளிக்கும் தனிப்பட்ட முறையில் ஆலோசனைகளும் அறிவுரைகளும் கொடுத்து நரம்புகள் வீணே தளராமலும், விறைக்காமலும் இருப்பதற்கான சில சிக்கலற்ற அப்பியாசங்களைச் செய்யும் முறைகளையும் காட்டிக் கொடுக்கின்றனர்.

இப்படிப்பட்ட மனோதத்துவ சிகிச்சை முறை, இப்பொழுது 85 விகித பலனை அளித்துள்ளது என்று கணிப்பிடப்பட்டிருக்கிறது

லண்டனில் மாத்திரம் நடத்தப்பட்ட ஆராய்ச்சியின்படி சுமார் 50 ஆயிரம் மக்கள் மைகிரேன் தலைவலி காரணமாக வேலைக்குச் செல்ல இயலாததால் ஆண்டு தோறும் 65 லட்சம் பவுண்கள், கைத்தொழில் துறைக்கு நஷ்டம் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இவ்வியாதியைக் குணப்படுத்த, 'மைகிரேன்ட்ரஸ்ட்' என்ற விசேஷ ஸ்தாபனம், லண்டனில் தனிப்பட்ட வைத்தியசாலை ஒன்றை நடத்துகிறது. மைகிரேன் தலைவலி பற்றிய ஆராய்ச்சி செய்வது சிகிச்சை அளிப்பது போசனை கூறுவது ஆகிய சேவைகளை இலவசமாக இவ்வைத்தியசாலை அளித்துவருகிறது.

தலைவலியால் அல்லல்படுவோர் வேதனையையும், கைத்தொழிற் துறையினர் அதனால் ஏற்படும் நஷ்டத்தையும் தவிர்க்க, 'மெகிரேன் ட்ரஸ்ட்' நடத்தும் இவ்வைத்தியசாலை, உலகின் பல பாகங்களிலும் ஊக்கத்தையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தியுள்ளது

...டக்கம் இம்மாதம் 8-ம் திகதி வரை சைவஸ்தாபனங்கள் ...கொண்டாடும் கந்தபுராண வாரத்தை யொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

# ...லர்பெருமான்போற்றிய கந்தபுராணம்

**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை —**

...ய்யும்படி அவ ...முக நாவலர் ...ற்றுக்கள்

...ணக் காலந் ...பிப் படிப் ...னும் எட்டு ...ட்டாது தித் ...றும் அத்தி ...ரத்தில் விய ...ந்தபுராணம்'' ... கந்தபுரா ...படிமெய்யன் ...ாகக் கேட்ப ...நோய்நீக்கம், ...திரபாக்கியம் ...இராசவசியம் ...களைத் தாந் ...வாறே பெறு ...நெடுங்காலம் ...நுபவத்தினால் ...ப்பட்ட விஷ ...த்தியம் சத்தி ...ஞ்சத்தியம்,'' ... பெருமான் ... நாட்டுக்கு ...ற ...டையூறு ...சவத்தையும் ... யாநுகாத்து ...வைக்கின்றது

...ன் மனம் பூரி ...ப வாழ்த்து ...ச்சியப்பசிவா ...கள் திருவடி

...ம் ஒரு கற்பக ...டுவதை எந் ...லும் சுதற்கு ...க்கிறது. ...லையிலிருக்கும் ...தனுக்கி மனி ...லே தேவர்

களுக்கும் அப்பாலே வழி நடப்பதற்கும் வழிசெய்வது கந்தபுராணம்

கச்சியப்ப சிவாசாரியரின் போதனை

கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள், சூரபத்மனின் சரித்திரத்தில் வைத்து வாழ்க்கையின் அடிப்படையாகத் தருமம் என்றொரு பொருள் உளது' என்ற உண்மையை நன்குவலியுறுத்தி இருக்கின்றார் ஒரு மனிதன் அருமையான உடம்பு வந்து வாய்த்ததும். அந்த உடம்பின் வேறாகத் தன்னை அறியமுடியாதவனாயிருக்கிறான் அந்தக்காரண விசேஷத்தினாலே தனக்குமேலே ஒன்று உண்டு என்ற எண்ணம் உதித்தாலும் அந்த ஒன்றை -முதலை அவன் விசாரிப்பதில்லை காணப்பட்ட உலகத்திலேயே அவன்மனஞ் செல்லுகின்றது: அறியாமையாகிய இருளில் இருந்து கொண்டே குருட்டாட்டம் ஆடுகின்றான்; நல்வினையும் செய்கின்றான் தீவினையும் செய்கின்றான் ஏன் செய்கின்றானென்று அவனுக்கே தெரியாது அப்படியிருந்தும்அவன் எடுத்த தேகவிசேஷத்தால் அவனுக்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. அது துன்பத்திலே வெறுப்பு இன்பத்திலேவிருப்பு.

நல்லாசிரியர்கள் இந்த விருப்பு வெறுப்புக்களைப் பயன்படுத்திக் கொண்டு, துன்பத்துக்குக் காரணம் தீவினை என்பதைக்காட்டி இன்பத்துக்குக் காரணமான நல்வினையில் முனையும்படி உபதேசிக்கின்றார்கள் அந்த உபதேசந்தான் தருமம் என்ற ஒரு பொருள்உளது' என்ற காசியர் உபதேசம். அது நல்லாசிரியராகிய கச்சியப்பசிவாசாரியரின் வாழ்க்கை அடிப்படை உபதேசம்.

மனிதன் தன்நல்வாழ்வுக்காகவே முதலில் தருமத்தை அநுட்டிக்க முன்வருவான் ஒரு மனிதன் அவ்வளவு செய்யமுன்வருவானாயின், அது பெருங்காரியம்அதனால் அவன் இம்மையில்நரேந்திரனாய் வாழலாம் மறுமைகளை எய்தலாம் "இந்திரராகிப் பார்மேல் இன்பமுற்று இனிதுமேவிச் சிந்தையில் நினைந்த'' முற்றலாம் என்கிறார் சிவாசாரிய சுவாமிகள்.

ஒருகாலத்திலே இந்த யாழ்ப்பாணத்திலுள்ள ஆடவர்கள் மகளிர்கள், முதியவர்கள், இளையவர்கள் ஆகிய எல்லாருடைய இரத்தத்திலுங் கலந்து. நரம்புத்துய்கள் தோறும் ஊறிச் சுரந்து கொண்டிருந்தது கந்தபுராணம் இதனாலே யாழ்ப்பாணத்திலே, அந்நிய கலாசாரங்கள்—மிலேச்ச கலாசாரங்கள் ஊற்றெடுத்தல் ஆற்றாது, தாமரையிலையில் நீர்போல் உருண்டு புரண்டு சாக்கடையில் ஓடுவ ஆயின.

படியெடுத்து உதவியவர்: 'பருளாய் விநாயகன்'

"தமிழும் சைவமும் இணைந்திருக்கும் இடத்தில் எந்தவிதமான வேற்றுமையும் தோன்றுவதில்லை. இந்த இரண்டும் மிஞ்சி இருக்குமானால் பேசுபவர், கேட்பவர் என்ற வேறுபாடே தோன்றாது. யாவரும் ஒன்றிவிடுகிறோம். இலங்கை -இந்தியா என்ற வேறுபாடு உண்டாக இடம் ஏது? வாழ்க்கையின் மேல்நிலையை அடையும்போது குறுகிய மனப்பான்மை போய் மனம் விரிந்து எல்லாரையும் அணைக்கும் ஆர்வம் தோன்றும். தமிழும், சைவமும் இரு கைகளாக யாவரையும் அணைக்கும் நிலை உண்டாக வேண்டுமென்பது என் அவா எத்தனைமுறை வந்தாலும் என்பால் அன்பு காட்டும் இலங்கைத் தமிழருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்."

## சபாநாய ...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நாயகருக்குவரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் சுன்னாகம் இராமநாதன் கல்லூரிக்குச் சென்று இராமநாதன் சிலைக்கு அஞ்சலி செலுத்தி மலர்மாலை சூட்டினார், கல்லூரி முன்றலில் வாசல் மொழுகி, வண்ணக்கோலமிட்டு, பூரணகும்பம்வைத்து குத்துவிளக்கேற்றி தமிழரின் மரபு பரியப்படி சபாநாயகர் இங்குவரவேற்கப் பட்டார்.

திரு ஷானவிதிலகரத்தின இங்கு பேசுகையில் காலஞ் சென்ற திரு இராமநாதன், தமிழ் சிங்களமக்களிடையே ஐக்கியத்தை உண்டுபண்ணி, ஐக்கிய இலங்கையை உருவாக்க விரும்பினார். அவரது இலட்சியத்தை உருவாக்க நான் செய்யும் அஞ்சலி, இந்த நாட்டுப்பிரசைகள் ஒவ்வொருவரும் போட்டிபூசலை மறந்து, நல்லதொரு இலங்கையை உருவாக்க முன்வர வேண்டும் என்றார். தமிழர் சிங்களவரின் ஒற்றுமையைத்தான் பிரதமரும் விரும்புகிறார் என்றும் அவர் சொன்னார்.

### வடபகுதி பல்கலைக்கழகம்

வடபகுதி பல்கலைக்கழகம் பற்றிசபாநாளகர் குறிப்பிட்டுப்பேசுகையில் பல்கலைக்கழகம் அமைப்பதினால் யாழ்ப்பாணத்திலுள்ள எந்தவொரு பாடசாலை மாணவரும் பாதிக்கப்படமாட்டார்கள். குறிப்பாக இராமநாதன் கல்லூரி மாணவிகளுக்கு ஏற்படாது என்றார்,

### சபாநாயகர் மகிழ்ச்சி

சபாநாயகர் மேலும் கூறியாவது:-

புதிய அரசியல் திட்டத்தில் சபாநாயகர் முறையும். மற்றும்பல மாறுதல்களும் நடைபெறவிருக்கும் இவ்வேளையில் சபாநாயகராக இருக்கும்போதே முதன் முதலாக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருப்பதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். வெற்றிகரமான சம்பவங்கள் ஆட்சிமன்றத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சிங்கள, தமிழ் எம் பிக்கள் தங்கள் கருத்துக்களை போட்டி மனப்பான்மையின்றி ஆட்சிமன்றத்தில் பேசிவருகிறார்கள். இது ஒரு நல்ல அறிகுறியாக அமைந்துள்ளது.

திரு எம் ஸி சுப்பிரமணியம் எம் பி சிறுபான்மைத் தமிழரின் நலன் கருதி சில விஷயங்களை அரசியலமைப்பு அமைச்சிடம் சமர்ப்பித்துள்ளார். அதையும் அரசாங்கம் வழங்க முன்வந்துள்ளது,

இராமநாதன் கல்லூரியிலிருந்து யாழ்ப்பாணம் நாகவிகாரைக்குச் சென்று பின்னர் நல்லூர் கந்தசாமி கோவிலுக்கும் சபாநாயகர் சென்றார். திரு அல்பிரட் துரையப்பா ... மதியபோசனம் அருந்தினார்.

# ஜெயராஜன் எழுதுவது..

என்றிவ்வாறு வாகீசகலாநிதி கி. வா. ஜ. அவர்கள் நேற்று முன்தினம் விமானம் வழியாகத் தாயகம் திரும்பும் சமயத்தில் விடுத்த ஒரு செய்தியில் இவ்விதம் குறிப்பிட்டார். ஈழத் தமிழரின் உள்ளங்களை அவர் பெரிதும் கவர்ந்துவிட்டதில் ஐயம் இல்லை.

அவர் மேலும் கூறியதாவது: "பல முறைகள் இலங்கைக்கு வந்திருந்தும் இந்த முறையில் ஒரு புதிய முறையில் தொண்டு ஆற்றுவதற்கு இறைவன் அருள் பாலித்தான். கோதுபதியாத நீதிபதி அமரர் ஸ்ரீஸ்கந்தராஜா தம்பதிகளின் நினைவாகச் சில சொற்பொழிவுகளை ஆற்றவேண்டுமென்று அவர்களது அருமை மக்கள் கேட்டுக்கொண்டார்கள். அதன்படி இங்கே வந்தேன். ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களின் பிறப்பிடமாகிய தொண்டமனாறு செல்வச் சந்நிதியிலும் சிவராத்திரியன்று திருக்கேதீச்சரத்திலும், கொழும்பில் மூன்று இடங்களிலும் இந்த முறை பேசக் கிடைத்தது நேர்மையும், பண்பும், தைரியமும், சிவபக்தியும் உடையவராகத் திகழ்ந்த சிவநெறிச் செல்வர் ஸ்ரீஸ்கந்தராஜாவின் அன்பை அனுபவித்த நான், அவர்களுடைய பண்பாட்டைத் தாமும் உடையவர்கள் என்பதைத் தெரிவிப்பதுபோல் அவர்களது மக்கள் என்னிடம் பேரன்பு காட்டினார்கள்."

0 0 0

கொழும்பு கொம்பனித் தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தாரின் ஆதரவில் ஒரு கூட்டம் நடந்தது. கூட்டத்தை எங்கே நடத்துவதென்று முதலில் யோசித்தனராம். புதிய கட்டிடம் கட்ட அஸ்திவாரம் போட்ட திறந்தவெளி இடத்திலேயே நடத்தலாம் என்று முடிவுசெய்து கூட்டமும் கூடியது மேலே வானில் கரிய மேகங்கள் சூழ்ந்து வந்தன. கூட்டம் ஆரம்பமானபோது தூற்றலும் தூறியது. மழை கொட்டிக் கூட்டத்தைக் கலைத்துவிடுமோ என்று என்னைப்போல் பலரும் அஞ்சினர். "முருகா! தெய்வமாக வாழும் எம் பெற்றோர்களே! மழை வராமல் பாதுகாக்கவேண்டும்" என்று ஸ்ரீஸ்கந்தராஜாவின் புதல்வியார் மனதால் பிரார்த்தனை செய்தாராம். அது வீண் போகவில்லை. வந்த மழை அப்படியே நின்று கூட்டம் முடிந்தபின்பே கொட்டியது இது தற்செயலா? மனப்பூர்வமான பிரார்த்தனைக்கு இறைவன் செவிசாய்ப்பான் என்பதை இது உறுதிப்படுத்தியது.

14 வருடங்களுக்கு முன் 22பேர்களுடன் ஆரம்பித்த வட கொழும்பு இந்து வாலிபர் சங்கம், இப்போது பன்மடங்கு பெருகி. சமயப்பணிகளை விசேஷமாகச் செய்துவருவதை கண்டேன். இம்முறை சிவராத்திரியன்று முகத்துவாரம் அருணாசலேஸ்வரர் கோயிலில், கொழும்பில் எங்கும் இல்லாதபடி பெரும் கூட்டமாம் மறுநாள் இரண்டாயிரம் பேருக்குமேல் அன்னதானம். மிளகாய், பருப்பு, புளி இவற்றுக்குத் தட்டுப்பாடென்றாலும், அன்னதானம் என்றதும் பலரும் தாராளமாகக் கொடுக்க முன்வந்ததாக அச்சங்கத்தார் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். சைவ சமூகத்தின் சிறப்பும், எதிர்கால நம்பிக்கையும் இந்த அன்னதானத்தில்தான் பெரிதும் தங்கியுள்ளது

இறைவனின் பெயரால் மக்களின் பசியை ஆற்றிவிட்டால், பல பிரச்னைகள் தீரும். தனி ஒருவனுக்கு உணவில்லை என்றபோது தானே ஜகத்தினை அழிக்கும் புரட்சிகள் தோன்றும்!

ஈழத்தில் பல இடங்களிலும் வாலிபர்கள், சமய, சமூக விஷயங்களில் பெரிதும் அக்கறை காட்டிப் பல நல்ல காரியங்களைச் செய்து வருவதைக் கண்டேன். எதிர்காலம் பற்றி இது புதிய நம்பிக்கை அளிப்பதாக இருக்கிறது.

கி. வா. ஜ. அவர்களின் பிரசங்கங்களை எவ்வளவு முறை கேட்டாலும் சலிக்கவில்லை. வாக்கியத்திற்கு வாக்கியம் குட்டிக்கதைகளும், உவமானங்களும் கூறி, நகைச்சுவையுடன் மக்கள் மனதில் பெரிய விஷயங்களையும் எளிதில் பதிய வைக்கிறார் அவர் பேச்சு திருமுருக கிருபானந்தவாரியாரின் பேச்சைப் போல் மெருகேறி வருகிறது என்கிறார் ஓர் அன்பர். இம்முறை மகாதேசாதிபதியை அவர் கண்டு வெகுநேரம் பேசமுடிந்தது குறிப்பிடத்தக்கது. சரஸ்வதி மண்டபத்தில் நடந்த கடைசிக் கூட்டத்தில் அவருக்குப் பொன்னாடை போர்த்தியபோது அவர் புதுப் பொலிவுடன் காட்சி அளித்ததாக ஓரன்பர் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றார்.

## இன்றைய பலன்

மேஷம்: புத்திக்கூர்மையுடன் இன்றுபுதியஎண்ணங்கள் தலைதூக்கும் புத்திரர்களால் புகழும் கிடைக்கும் இரகசியத்தை நன்று!

ரிஷபம்: கட்டிவேல்லம் போல் இனிக்கும் வாழ்க்கை காதலர்கள் எண்ணங்கள் கைகூடும் இனபந்துக்களின் ஆதரவும் கிடைக்கும்.

மிதுனம்: பொறுமையின் நிழல் உங்களைத் தொடரும் உதவிசெய்யப் போய் உபத்திரவத்தை தேடிக் கொள்ளுவீர்கள்.

கடகம்: அறவழிகளை மனம் நாடும். பொதுவிவகாரங்களில் ஈடுபடுவதன் மூலம் பொருள் செலவுக்கு இடமுண்டு.

சிம்மம்: நல்லவர்களின் அறிமுகம் இன்றுகிடைக்கும் புதிய முயற்சிகள் கைகூடும் இன்றுதித்திப்பானதினம்,

கன்னி; இதயம்எரிமலையாகும் எதிரிகள் தாக்குவர் ஏமாற்றத்திற்கும் இடமுண்டு துக்கமானதினம்.

துலாம் களவ்திரவழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர் புத்திரவழியாலும் மகிழ்ச்சி

விருச்சிகம் முயற்சியில் முட்டுக்கட்டை தென்படும் மற்றவர்களிடம் குறைகேட்க நேரிடும் நண்பர்களின் தொல்லைஎரிச்சலைத்தரலாம்

தனுசு: இறைவழி பாடு மேலிடும் இதயத்தில் அமைதியும் ஏற்படும் பிதா வழி மூலம் நல்ல செய்தியும் கிடைப்பதற்கு இடமுண்டு.

மகரம் கைநிறையப் பணம்தாராளமாகக் கிடைக்கும் புதிய விருந்தினர்கள் உங்களைத் தேடிவருவார்கள்

கும்பம் துன்பத்தின் ரேகைகள் படரும் எதிலும் தயக்கம் ஏற்படும் ஆதரவு கொடுத்தவரே முடிவில் கையை விரிக்கக்கூடும்

மீனம் புதுமையான எண்ணங்கள் தலைதுக்கும் தொழிற் துறையில் புதிய சாதனைஉருவாகும் இடமாற்றத்துக்கான சந்தர்ப்ப

சோதிடக் கலாநிதி திருமதி க. வேலுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லியடியில் வானொலி விவசாயப் போட்டி

அம்பன், திங்கள்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் விவசாய இலாகாவும் இணைந்து நடாத்தும் வானொலி விவசாயவிழா இம்மாதம் 22-ந் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருக்கின்றது. யாழ். மாவட்டத்திலுள்ள விவசாயக் கழகங்கள் இவ்விழாவில் கலந்துகொள்ளும்.

விவசாயக்கழகங்களிலிருந்து மாகாண ரீதியில் தெரிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான நேரடிப் போட்டி நடைபெறுவதுடன் வெற்றி பெற்றோருக்குப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

கடந்த ஆண்டு கிளி நொச்சி றொட்றிகோ மைதானத்தில் நடைபெற்ற இவ்விழா இம்முறை நெல்லியடியில் நடைபெறுகின்றது. இவ்விழாவில் விநோத உடைப்போட்டி, சங்கீதம், நடனம், பார்வையாளர் போட்டி ஆகியனவும் இடம் பெறும். இதற்கான ஒழுங்குகளை யாழ். மாவட்ட விவசாய அதிபர் திரு. பொ. மாணிக்கவாசகர் மேற்கொண்டுள்ளார்.

புளியங்கூடல்

## கரபந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், செவ்

புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையம் நடாத்தும் தீவுப்பகுதிக் கைப்பந்தாட்டப்போட்டி 'ஓவர்க் கேம்' 'செற்றப்கேம்' என இருவகையில் நடாத்தப்படவுள்ளது.

'ஓவர் கேம்' போட்டியில் வெற்றிபெறும் குழுவிற்கு திரு. ச. யோ. நீ. இராசநாயகம் அவர்களுடைய ஞாபகார்த்த வெற்றிக்கேடயமும் 'செற்றப்கேம்' போட்டியில் வெற்றிபெறும் குழுவிற்கு திரு. இ. சிற்றம்பலம் அவர்களுடைய ஞாபகார்த்த வெற்றிக்கேடயமும் வழங்கப்படவுள்ளன.

இப்போட்டியில் விண்ணப்பிக்கும் கழகங்கள் தீவுப்பகுதியைச் சேர்ந்தவையாக இருக்கவேண்டுமென்றும் பங்குபற்றும் ஒரு குழு அல்லது விளையாடுபவர் இருவகைப் போட்டியிலும் பங்கு கொள்ளலாமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கணேசா வெற்றி

உரும்பராய், திங்கள்

வலிகாமம் கிழக்கு காரியாதிகாரி பிரிவில் நடைபெற்றுவரும் விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் உரும்பராய் கணேசா விளையாட்டுக்கழகமும் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன இதில் கணேசா கழகம் 2 கோலால் வெற்றி பெற்றது.

உரும்பராய் இந்துக்கல்லூரிமைதானத்தில் நடந்த இப்போட்டிக்கு திரு எஸ். நடேசன் மத்தியஸ்தம் வகித்தார்.

## அம்பன் கழகம் தெரிவு

அம்பன், திங்கள்

வடமராட்சிப் பகுதி இளம் விவசாயிகள் கழக வட்டார ரீதியிலான போட்டி வடமராட்சிப் பகுதி விவசாய போதனாசிரியர் காரியாலயத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் 9 இளம் விவசாயிகள் கழகம் கலந்துகொண்டன இதில் முதலாவதாக அம்பன் விவசாய விசாலிப்பு சேவையாளர் திரு. ஏ. வேலுப்பிள்ளையின் பிரிவைச் சேர்ந்த அம்பன் இளம்விவசாயகழகம் தெரிவு செய்யப்பட்டது. மாவட்ட ரீதியிலான போட்டி யாழ். மாவட்ட விவசாய அலுவலகத்தில் மாவட்ட விவசாய அதிபர் திரு. பொ. மாணிக்கவாசகரால் இன்று நடத்தப்படுகிறது.

## முதலாவது இல்ல விளையாட்டுப் போட்டி

முல்லைத்தீவு, திங்கள்

முல்லைத்தீவு கன்னப்பாடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை இல்லங்கட்கான விளையாட்டுப்போட்டி அதிபர் பண்டிதர் நா. கந்தையா தலைமையில் நடைபெற்றது.

முல்லைத்தீவுப் பொலிஸ் அதிபர் திரு. யே. வி. பிள்ளை விளக்கேற்றிப் போட்டியை ஆரம்பித்து வைத்தார். வவனியாப் பகுதி விளையாட்டுப் போதனாசிரியர் திரு. தங்கராசா மூவர்ணக் கொடியை ஏற்றி வைத்தார். போட்டி முடிவில் திரு. பொ. தியாகராசா ஆசிரியர் நன்றி கூறினார். திரு. தங்கராசா வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார். பாரதி இல்லம் இவ்வருடச் சம்பியனானது.

மேற்படி பாடசாலையில் இந்த வருடம் தான் முதல் முறையாக இல்லங்கட்கான விளையாட்டுப்போட்டி நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

## மிட்லன்ட் வெற்றி

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் முஸ்லிம் வட்டாரத்தில் உள்ள விளையாட்டுக்கழகங்களுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இறுதி ஆட்டத்தில் மிட்லன்ட் கோஷ்டியினர் சம்சுன் கோஷ்டியினரை 2-1 கோல்களால் தோற்கடித்து "பி" பிரிவு சம்பியன் கிண்ணத்தைப் பெற்றனர்.

மிட்லன்ட் கோஷ்டியைச் சேர்ந்த மன்சூர், பஸீர் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் சம்சுன் கோஷ்டியைச் சேர்ந்த றபீக் ஒரு பனல்டி கோலையும் போட்டனர் ஜின்னா மைதானத்தில் நடந்த இப்போட்டிக்கு திரு. மாசிலாமணி மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## இல்லவிளையாட்டுப் போட்டி

புதுக்குடியிருப்பு, திங்கள்

புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டி வித்தியாலய அதிபர் திரு. நா. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

பாரதி இல்லம் 228 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் வள்ளுவர்இல்லம் 202 புள்ளிகளையும் கம்பர் இல்லம் 196 புள்ளிகளையும் பெற்று இரண்டாம்மூன்றும் இடத்தையும் பெற்றன. வெற்றிபெற்றோருக்கு வவனியா கல்வியதிகாரி திரு மாணிக்கவாசகர் பரிசில் வழங்கினார்.

## இடமாற்றம்

வேலணை, திங்கள்

வேலணை மத்தியமகாவித்தியாலயஆசிரியர் திரு. பொ பொன்னுச்சாமி இம்மாதம் 25ம்திகதியிலிருந்துவேலணை மேற்கு நடராசா வித்தியாசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

# பாண்டிருப்பு செய்திகள்

(நமது நிருபர்)

**இடமாற்றம்**

கல்முனை பாத்திமாகல்லூரியில் இரண்டுவருட காலமாக வர்த்தக ஆசிரியராகப் பணிபுரிந்த ஜனாப் எஸ் எச். எம். சாலிஹூ சம்மாந்துறை மகாவித்தியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரின் இடத்திற்கு சம்மாந்துறை மகாவித்தியாலயத்தில் கடமைபுரிந்த ஜனாப் எம். சீ. ஆதம்பாவா நியமிக்கப்பட்டுள்ளார்.

0 0 0

**திருடர்**

இங்கு கோழித்திருடர்களின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறதாம்.

0 0 0

**சிவராத்திரி**

சேனைக்குடியிருப்பு இளைஞர் விவசாயக்கழகமும் கலைவாணி கலைக்கழகமும் இணைந்து சிவராத்திரி விழாவை விநாயகர் ஆலயத்தில் சிறப்பாக நடாத்தினர். யோகாசன வித்துவான் காசிப்பிள்ளையின் சீடரான பக்தர்சந்திரலிங்கம் யோகாசனம் செய்துகாண்பித்தார் 'போதைநெஞ்சம்' சிவகாமி, ஆகிய நாடகங்களும் இடம் பெற்றன.

0 0 0

கோட்டைக்கல்லாறுசைவநெறிக் கழகத்தினால்ஒழுங்கு செய்யப்பட்ட சிவராத்திரி விழா கோட்டைக் கல்லாறு விநாயகர் ஆலய வீதியில் நடைபெற்றது. 'கட்டடா மகனே தாலியை' நெஞ்சம் மாறிவிடு' ஆகிய நாடகங்கள் இடம்பெற்றன. கல்லாறு கலைக்கோயில் மாணவிகளின் நடன நிகச்ழ்சியும் காண்பிக்கப்பட்டது.

0 0 0

கல்முனை ஸ்ரீ விநாயகர் ஆலய திருப்பணி சபையினரால் ஆலயத்து வீதியில் சிவராத்திரிவிழா நடாத்தப்பட்டது. 'கதிரவன் இசைக்குழுவின் இசைக் கச்சேரியும்' கருத்தரங்கும் நடாத்தப்பட்டன.

பாண்டிருப்பு அரசடி அம்மன் ஆலயமுன்வீதியில்திருப்பணிச்சபையினர் சிவராத்திரிவிழாவைக் கொண்டாடினர்.

0 0 0

உரும்பராய், திங்கள்

யாழ்ப்பாணம்-இருபாலைக்கிடையில் நீண்டகாலமாக நடைபெற்றுவந்த பஸ் சேவையை இருபாலை கிழக்கு வரை நீடித்தமைக்கு வலிகாமம் கிழக்கு பஸ் பிரயாணிகள் சங்கம் இ. போ. சவை பாராட்டியுள்ளது.

## சித்திரக்காட்சி

பருத்தித்துறை, திங்கள்

பருத்தித்துறைவட்டாரப் பாடசாலைகளின் சிறுவர் சித்திரக் காட்சி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் மார்ச் மாதம் 5-ம், 6-ம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது. வடமாநில கல்விப்பகுதியினரின் ஆதரவில் இந்த சித்திரக் கண்காட்சி நடைபெறுகிறது.

## படக்காட்சி

கொடிகாமம், திங்கள்

கச்சாய் அரசினர் வித்தியாலயத்தில் நோய்க் கிருமிகள், கால்நடை வளர்ப்பு, சருமம், குடும்பத் திட்டம் என்பவை சம்பந்தமான படக்காட்சி ஒன்று நேற்று முன்தினம் காண்பிக்கப்பட்டது, கொடிகாமம் பகுதி சுகாதாரப் பரிசோதகர் திரு. எஸ். [illegible] கான விளக்கத்தைக் கொடுத்தார்.

## இளைஞன் தற்கொலை

பருத்தித்துறை, திங்கள்

கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த தொழில் நுட்பத்துறை மாணவன் தாமோதரம்பிள்ளை சிவகுமாரகுலசிங்கம் (வயது 22) பரீட்சையில் தவறியதென்ற காரணத்தால் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார். கொழும்பிலிருந்து ரயிலில் வந்த இவர் மறுநாள் அதிகாலை தற்கொலை செய்துகொண்டதாக விசாரணையில் கூறப்பட்டது. தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## நாளை ஆரம்பம்

மாவிட்டபுரம், திங்கள்

மின்னொளியில் மாபெரும் உதைபந்தாட்டப் போட்டிகள் காங்கேசன்துறை பட்டின சபை மைதானத்தில் இம்மாதம் 3-ம், 4-ம் திகதிகளில் நடாத்தப்படவிருக்கிறது.

காங்கேசன்துறை யங் றோயல் விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்படும் இவ் உதைபந்தாட்டப் போட்டிகளில், அனுராதபுர மாவட்டத்தெரிவுக் கோஷ்டி திருமலை தெரிவுக்கோஷ்டி, யாழ் தெரிவுக் கோஷ்டி, வல்வை விளையாட்டுக் கழகம், தெல்லிப்பளை மகாஜனா, யூனியன் சுன்னாகம் ஸ்கந்தா, உரும்பராய் இந்து ஆகியவற்றின் பழையமாணவர் குழுக்களும் கலந்து கொள்ளவிருக்கின்றன.

தினமும் இரு போட்டிகள் நிகழும் போட்டிகள் முடிந்த

## ஓய்வு பெற்றார்

வேலணை, திங்கள்

வேலணை மத்திய மகாவித்தியாலய ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. மா. செல்லையா இம் மாதம் சேவையினின்றும்ஓய்வுபெற்றுள்ளார் திரு எஸ் பாலசிங்கம் தலைமையில் பாடசாலையில் அவருக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடைவைபவத்தில் திருவாளர்கள் கேதாரநாதன், பி பொன்னுச்சாமி, கே இராசையா செல்வி கந்தையா பொ. நடராசா ஆகியோரும் பாடசாலை அதிபரும் பாராட்டுரை வழங்கினர்.

## வெங்காய விற்பனை

பருத்தித்துறை, திங்கள்

14 நாட்கள்தோட்டத்தில் கிடந்து காய்ந்தபிறகே சங்கங்களுக்கு விவசாயிகள் வெங்காயம் விற்பனைசெய்யலாமென்ற விதியைமீறி, சிலர் உடனடியாகவிற்பதாக கட்டைவேலிப் பகுதியில் பேசப்படுகிறது. இதனால் பொதுமக்கள் பாதிக்கப்படுவார்களென்றும் இவ்விதமாக விதிகள் மீறப்படுவது கூட்டுறவு இயக்கத்தை அனுமதிப்பதாகுமென்றும் சிலர் கூட்டுறவு உயர்பீடத்திற்கு அறிவித்திருப்பதாக அறியப்படுகிறது.

பின் வயாவிளான், தெல்லிப்பளை இளவாலை ஆகிய பகுதியூடாக யாழ்ப்பாணம் வரை பஸ் போக்குவரத்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.


கையிருப்பில் கிடைக்கும்

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

WALKER-WOLSELEY

நீர்ப்பாசன பம்புகள்

★ மணிக்கு 10,000 கலன்
★ குறைந்த இயக்கச் செலவு
★ பராமரிப்புச் சுலபம்



2" பெற்றோல் / மண்ணெண்ணெய் பம்ப்

நீர்ப்பாசன, மற்றும் பொதுவான இறைப்பு வேலைகளுக்கான பிரசித்திபெற்ற நம்பகமான வாக்கர் வூல்ஸ்லி பெற்றோல்/ மண்ணெண்ணெய் யந்திரங்கள் இப்பொழுது வாக்கர் இன்டஸ்ரீஸ் (சிலோன்) லிமிட்டெட்டால் இலங்கையில் தயாரிக்கப்படுகின்றன.

WI வாக்கர் இன்டஸ்ரீஸ் தயாரிப்பு

பக்கபலமான பராமரிப்பு ஊழியர்களுடன் சகலவித உதிரிப்பாகங்களும்.

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

இல: 37/39, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

தொடர்பு கொள்க:

திரு. ஏ. சி. ஜோசெப் (மனேஜர்)

தொலைபேசி: 7031


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாடு தேர்தல்களம்

# "தி. மு. கழகத்தினர் லஞ்சம் வாங்கியதை நிரூபிப்பார்களா?"

## எம். ஜி. ஆர். எழுப்பிய கேள்வி

[ நமது சென்னை நிருபர் ]



'திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்கள் லஞ்சம் வாங்கியதாக சிண்டிகேட் காங்கிரசார் பேசிவருகிறார்கள். இதை அவர்கள் நிரூபிப்பார்களானால் லஞ்சம் வாங்கியவரை கட்சியிலிருந்து தூக்கிஎறியத் தயங்கமாட்டோம். தி.மு.க.வினர் லஞ்சம் வாங்கியதை நிரூபிப்பார்களா?'

உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் தி. மு. க வேட்பாளர் கே. எம் ராஜகோபாலை ஆதரித்து திரு. எம். ஜி. ராமச்சந்திரன் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

எம். ஜி. ராமச்சந்திரன் தொடர்ந்து கூறியதாவது:- இந்தக் கூட்டத்திற்கு திரள் திரளாக தாய்மார்கள் வந்திருக்கின்றார்கள், இதிலிருந்து நாட்டின் நிலைமையைத்தாய்மார்கள் உன்னிப்பாக கவனிக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. இதை எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன். தி.மு கழகத்தின் கொள்கைகளை நாங்கள் சொல்லித்தான் நீங்கள் புரிந்துகொள்ளவேண்டுமென்பதில்லை

தேர்தல் என்பது சாதி உறவுகளைக் கடந்தது. ஒட்டுப்போட்டு ஒரு கட்சியிடம் ஆட்சியை ஒப்படைப்பது 'புரோ' நோட்டு எழுதிக் கொடுப்பதுபோல் ஆகும். 5 ஆண்டு காலத்திற்கு வெற்றி பெறும் கட்சியிடம் நாட்டையே ஒப்படைக்கிறோம். என்று பொருள். எனவே ஓட்டுப்போடுமுன்னர் நன்கு சிந்தித்து செயலாற்றவேண்டும்.

நமதுஓட்டுக்குவிலைமதிப்பு கிடையாது. எனவே 2 அல்லது 5 ரூபா வாங்கிக் கொண்டு நாம் ஏமாந்துவிடக்கூடாது. வெற்றி பெற்று ஆட்சியை ஏற்பவர்கள் ஆண்டுக்கு 300 கோடி ரூபா வரவு-செலவு செய்கிற திறன் பெற்றவர்களாக இருக்கவேண்டும். சிண்டிகேட் காங்கிரசார் பணத்தைக் கொடுத்து ஒட்டை வாங்கிவிடலாம் என்ற நம்பிக்கையிலிருக்கிறார்கள். தேர்தலுக்குலட்சக்கணக்கில் பணத்தைச் செலவிடுகிறார்கள் என்றால் எதனை நம்பிச் செலவழிக்கின்றார்கள். அவர்கள் ஆட்சிக்குவந்தால் இந்தப்பணத்தை சம்பாதிக்க விரும்புவார்களா? மாட்டார்களா? இப்படிச் சம்பாதித்துத்தானே கடந்த 20வருடகால ஆட்சியில் பெரிய கோடீஸ்வரர்களாகியிருக்கிறார்கள்.

### எம். ஜி. ஆர் பிரசாரம்

செங்கல்பட்டு மாவட்டத்தில் தி. மு. கழக வேட்பாளர்களை ஆதரித்து எம். ஜி. ராமச்சந்திரன், நேற்று முன்தினம் பிரசாரம் செய்தார். சாலவாக்கத்திலிருந்து எம். ஜி. ஆர். புறப்பட்டு இரவு 10 மணிக்கு உத்தரமேரூர் வந்து சேர்ந்தார். நகர எல்லையில் நாதஸ்வர இசை ஒலிக்க தி மு. கழக தொண்டர்கள் எம். ஜி. ஆரை வரவேற்றார்கள். எம். ஜி ஆர். திறந்த ஜீப்வண்டியில் கூட்டம் நடந்த இடத்திற்குச் சென்றார். ரோட்டின் இருபுறமும் ஆண்களும், பெண்களும் திரண்டுநின்று எம். ஜி. ஆரை வரவேற்றார்கள். வாழை மரத்தினாலும் கொடிகளினாலும் வண்ண விளக்குகளினாலும் தெருமுழுவதும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

எம். ஜி ஆரைக் கண்டதும் மக்கள் எம். ஜி. ஆர். வாழக, மக்கள் திலகம் வாழ்க, உதயசூரியனுக்கே எங்கள் வோட்டு என்று கோஷம் எழுப்பினார்கள். இக்கூட்டத்தில் எம். ஜி. ஆர். பேசும்போது கூறியதாவது: 'நாடோடி மன்னன்' படத்தில் நான்சொன்ன திட்டங்களை காங்கிரஸார் அன்று கேலிசெய்தார்கள். ஆனால் அந்தத் திட்டங்கள் இன்று நாட்டிலே நடைமுறையில் செயல்பட்டுவருவதை பார்க்கிறோம், அந்தத் திட்டங்கள் தி. மு. கழக அரசினால் நிறைவேற்றப்படுகிறது.

காமராஜர்என்னைசினிமாக்காரன்என்று கேலிபேசினார். கலைவாணர் என் எஸ். கிருஷ்ணன் ரஷியாசென்று திரும்பி வந்தபிறகு நாட்டிலும் சமதர்மம் தோற்றவேண்டும் என்று பேசினார் ஆனால் காங்கிரஸார் கோமாளி பிதற்றுகிறான் என்று கூறினார்கள்.

### கலைவாணரை கேலிசெய்தனர்

காமராஜர் ரஷ்யாசென்று விட்டுத் திரும்பியதும் ஆளுக்கு ஒரு வீடு என்று சொன்னார். ஆளுக்கு ஒரு வீடு என்றால் கணவனுக்கொரு வீடு; மனைவிக்கு ஒரு வீடு. அப்படியானால் கணவன் ஒரு வீட்டிலும் மனைவி ஒரு வீட்டிலும் வாழவேண்டிய நிலைமை வரும் இது வாழ்க்கை முறைக்கு ஒத்துவருமா? திருமணம் ஆகாத காமராஜருக்கு வேண்டுமானால் ஒத்துவரலாம். குடும்பத்திற்கு ஒரு வீடு என்றால் ஏற்றுக்கொள்ளலாம். காமராஜர் இப்படிச் சொன்னாலும் யாரும்எதுவும் சொல்லவில்லை, பெருந்தலைவர் என்று பேசாமல் இருந்துவிட்டார்களோ? ஆனால் கலைவாணர் ரஷ்யா சென்று வந்து சமதர்மம் என்று சொன்னவுடன் கோமாளி என்று கேலிசெய்தார்கள்.

### சிண்டிக்கேட் வெற்றிபெறும்

பொதுத்தேர்தலில் சிண்டிகேட் காங்கிரஸ் கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெற்று மந்திரிசபை அமைக்கும் என்று அகில இந்திய புகழ் கைரேகை நிபுணர் ஜெமினி செல்வம் நேற்று தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது: காமராஜரின்கைரேகை டிகிரி 333 ஆக உயர்ந்து காணப்படுவதாலும் தற்கால நடப்புதசை சூரிய தசையில் சந்திரபுத்தி 19-2-71 முதல் மிகமிக சிறப்புடன் ராஜயோகத்தில் இருப்பதாலும், ஆரம்பகாலமான ஜனன காலத்தில் உலகப்புகழ் தரும் கிரகமான சூரியனுக்கு பாக்கியத்தில் குரு சந்திரயோகத்தில் சிறப்புடன் இருக்கும்சந்திரனை சுக்கிரன்நேர்பார்ப்பதால் சந்திரபுத்தியும் இப்போதுநடப்பதால்மகத்தான வெற்றிகள் பெறும் காலமாகும். இதனால் இந்த 71ம் ஆண்டு அகில இந்தியாவில் சிண்டிகேட் காங்கிரஸ் கூட்டணி செல்வாக்கு அதிகரித்து சிறப்புள்ளதாக இருக்கும்

### கம்யூனிஸ்ட் பணம்

இத்தேர்தலில், கோடிக்கணக்கில் கம்யூனிஸ்ட் நாடுகளின் பணம் இங்கு செலவிடப்படுவதாக அகில இந்திய சிண்டிகேட் காங்கிரஸ் தலைவர் நிஜலிங்கப்பா தெரிவித்திருக்கிறார்.

திரு நிஜலிங்கப்பாமேலும் தெரிவித்திருப்பதாவது: வடகொரியா ஜனாதிபதி கிம் இல்-சங்கின் சிந்தனைகள் என்ற பெயரில் நமதுநாட்டுப்பத்திரிகைகள் பல வற்றில் பக்கம்பக்கமாக விளம்பரங்கள் கொடுத்திருக்கிறார்கள் இது இந்த தேர்தலில் கோடிக்கணக்கில் இந்த நாட்டின்பணத்தைஇறைக்க கம்யூனிஸ்ட் கையாளும் போர்வையாகும் நான் இதுபற்றி விசாரணை செய்து பார்த்தேன். சென்ற சில ஆண்டுகளில் வடகொரியா விளம்பரம் என்ற பெயரால் பல பத்திரிகைகளுக்கு ஏராளமாக பணம் கொடுத்திருக்கிறார்கள். விளம்பரக்கட்டணப்படி அவர்கள் கடந்த இரண்டாண்டுகளில் 11 லட்சத்து14 ஆயிரம்ரூபா கொடுக்க வேண்டியிருக்க ஒரு கோடி ரூபாய் அளவுக்கு பணம் கொடுத்திருக்கிறார்களாம் இப்படி கொடுக்கப்பட்ட பணம் அரசியலுக்குத்தான் பயன்படுத்தப்பட்டிருக்கவேண்டும். அவர்களது இந்தச் சட்டவிரோதமான செயலை மறைக்க அவர்கள் விளம்பரத்தை திரையாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

### விசாரணை வேண்டும்

சென்ற 1969-ல் வடகொரியாவுக்கு இந்தியா ரூ. 2,36,000 மதிப்புள்ள பண்டங்களை ஏற்றுமதி செய்தது. ஆனால் அங்கிருந்து எதுவும் இங்கு இறக்குமதியாகவில்லை அப்படியிருக்க இவ்வளவு தொகையை அவர்கள் எங்கிருந்து பெற்றார்கள். எனவே இதுசம்பந்தமாக விசாரணை நடத்தவேண்டும்.

### குற்றாலத்தில் சிவாஜி

தமிழ் நாட்டில் சுறுவளி சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்டிருந்த நடிகர் சிவாஜி கணேசன் கன்னியா குமரியிலிருந்து திருநெல்வேலி, பாளையங்கோட்டை, சேரன்மாதேவி, தல்லூர் வழியாக குற்றாலம் சென்றார், சிவாஜிக்கு பலத்த பொலிஸ்பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்தது சிவாஜி வரும் வழியில் ஒரு கோஷ்டியினர் சிவாஜியின் கார்கள் மீது கற்கள் வீசினார்கள். இதனால் கார் சேதமடைந்தது' சிவாஜிக்கு அருகில் இருந்த மணியம் என்பவருக்கு சிறுகாயம் ஏற்பட்டது' சிவாஜியின் காரைப் [illegible] ருக்கும் கற்கள் வீசப்பட்டன. பாதுகாப்புக்குவந்த பொலிஸ்காரர் இருவருக்கும் காயம் ஏற்பட்டது.

திருநெல்வேலி நகரத்தில் 2 யானைகள் சிவாஜிக்கு மாலைகள் சூட்டின, பல்லாயிரக்கணக்கான மக்கள், உற்சாகமான கோஷத்துடன் சிவாஜியைவரவேற்றார்கள்.

### உயிரைப்பற்றி கவலையில்லை

இக்கூட்டத்தில் சிவாஜி கணேசன் கூறியதாவது:- தூத்துக்குடியில் என்னைக் கொலைசெய்ய முயற்சி நடந்தது உண்மையே. ஆனால் எமதுநண்பன் எம் ஜி ராமச்சந்திரன், அங்கு என்ன நடந்துவிட்டது என்று கேட்கிறார். அவர் எப்போது பொலிஸ் அதிகாரியாகமாறினார் என்று எனக்குத் தெரியவில்லை தூத்துக்குடியில் நடந்த சம்பவம் எல்லாரும் அறிந்ததே. ஆனால் எம் ஜி' ராமச்சந்திரன்முழுபூசனியை சோற்றில் மறைக்கப்பார்க்கிறார். சம்பவம்பற்றி இவர் முந்திக்கொண்டு பேசுவது ஏன் என்று தெரியவில்லை. பல இடங்களில் என்னைக் குறிவைத்தனர். தெய்வாதீனமாக நான் தப்பிவிட்டேன். சாயர்புரத்தில் பயங்கர சதி நடந்தது சிவகிரியில் ஆயுதங்களுடனும் மிளகாய்த் தூளுடனும் பலர் என்னைத் தாக்கக் காத்திருந்தனர் அவற்றிலிருந்து நான் தப்பிவிட்டேன். என் உயிர் போவதுபற்றி நான்கவலைப்படவில்லை என் ஒரே லட்சியம் தி. மு. க. ஆட்சியை அகற்றவேண்டும் என்பது தான்.

### ஈ. வே: ரா. மீது வழக்கு

ஜனவரிமாதம் 24-ம் திகதி சேலத்தில் நடந்த மூடநம்பிக்கை ஒழிப்புமாநாட்டு சம்பவத்தை யொட்டிதிராவிடக் கழக தலைவர் ஈ. வே. ரா. பெரியார்மீதும், அம்மாநாட்டு வரவேற்பு கமிட்டித் தலைவர் டி. வி. சொக்கப்பாமீதும் மற்றும் 13 பேர் மீதும் பொலிசார் வழக்குதாக்கல் செய்துள்ளனர்.

### கருணாநிதி வரவில்லை

பொதுக்கூட்டத்தில் முதல் அமைச்சர் கருணாநிதியைப் பற்றி அவதூறாகப் பேசியதாக, நெல்லை ஜெயமணி மீது பொலிசாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, செஷன்சு நிதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சாட்சியாக வரவேண்டிய முதல் அமைச்சர் கருணாநிதி கோர்ட்டிற்கு வராததால் விசாரணை பின்போடப்பட்டது.

உடுமலைப் பேட்டையில் நடந்த சிண்டிகேட் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் திரு. கருத்திருமன் பேசும்போது கூறியதாவது: மாதம் 500 ரூபா சம்பளம் வாங்கும் திராவிட முன்னேற்றக்கழக மந்திரிகள் எப்படி இத்தனை ஆடம்பரமாக வாழ்க்கை நடத்துகிறார்கள் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் இது பற்றி விசாரணை நடத்தும்.

### ஏவரெஸ்ட் மலைஏறும் கோஷ்டி

காட்மாண்டு, மார்ச் 1 ஏவரெஸ்ட் மலையில் 31 அங்கத்தவர்களைக் கொண்ட குழு ஒன்று மலை ஏறத் தொடங்கியிருக்கிறது, 13 நாடுகளைச் சேர்ந்த மலை ஏறும் கோஷ்டி உறுப்பினர்கள் இதில் பங்கு கொள்கின்றனர் இம்மாதம் 13-ம் திகதி தாங்கள் ஏறத்திட்டமிட்ட இலக்கை அடைந்துவிடுவோம் என அக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

இதுவரையும்யாரும்ஏறாத எவரெஸ்டின் தென்மேற்குப் பகுதியான மிகவும் அபாயகரமான வழியாகும் இது எனச் சொல்லப்படுகிறது இந்த மலை ஏறும் கோஷ்டியின் பிரிட்டனைச் சேர்ந்த 10 பேரும் அமெரிக்காவைச் சேர்ந்த 6 பேரும் மற்றும் நேபாளம் இந்தியா போன்ற நாடுகளிலிருந்தும் மலை ஏறும் வீரர்கள் கலந்து கொள்கின்றனர்.


## கலாநிலைய பற்றுச்சீட்டுப் புத்தகங்கள்

இரு கலரில் அழகிய முறையில் அச்சடித்த
(50 மூலப் பிரதிகளும், அதன் பிரதிகளும்)
பற்றுச்சீட்டுப் புத்தகங்கள்
எம்மிடம் குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ளலாம்

ஒவ்வொரு 25 புத்தகங்களுக்கும்
பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் வைத்து
எழுதுவதற்கு அழகான
மட்டைக்கவர் இலவசமாகக் கொடுக்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு நேரில் எம்மிடம்
தொடர்பு கொள்ளவும்.

"ஈழநாடு"
வர்த்தக அச்சகப்பகுதி
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபாநாயகருக்கு பலாலியில் மகத்தான வரவேற்பு

## நேர்முகப் பரீட்சைக்கு வந்த கடிதம்

நல்லூர், திங்கள்

நீர்ப்பாசனப் பிரிவில் மேற்பார்வையாளர் பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சை பெப்ரவரிமாதம் 27-ம் திகதி நடைபெறுமென்றும், விண்ணப்பகாரர் ஒருவருக்கு அனுப்பப்பட்டிருந்த கடிதம் ஒன்று 27-ம் திகதியே கிடைத்துள்ளதாம்.

இவ்வித அனுபவத்துக்குள்ளான கொக்குவிலைச் சேர்ந்த ஈஸ்வரராஜா என்பவர் இதுபற்றி கோப்பாய் எம். பி. யிடம் புகார் செய்துள்ளார் கோப்பாய் எம். பி. நீர்ப்பாசனப் பிரிவு டைரக்டர் திரு. பெருமையினருக்கு அனுப்பியுள்ள அவசர தந்தியொன்றில் குறிப்பிட்ட விண்ணப்பகாரருக்கு இன்னுமொரு தந்தியில்நேர் முகப்பரீட்சை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுள்ளார்.

## கிழக்குப் பாகிஸ்தானில் அவாமிலீக் ஹர்த்தால்

கராச்சி, மார்ச்.1

பாகிஸ்தானில் தேர்தல் ஒத்திப் போடப்பட்டதை எதிர்த்து கிழக்குப் பாகிஸ்தானில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்போவதாக அவாமிலீக் கட்சித் தலைவர் சேக் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

ஹர்த்தால் அனுஷ்டிக்கும் தினமாக புதன்கிழமை தெரிவு செய்யப்பட்டுள்ளதென்று அறிவித்துள்ளார்.

......

## நியமனம்

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் உதவியாசிரியராகக் கடமையாற்றிய ஆர், எஸ். நடராசா இம்மாதம் முதல் கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை தமிழ் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## தமிழரசு எம். பிக்களும் கலந்து கொண்டனர்

மாவிட்டபுரம், செவ்

நேற்றுக் காலை பலாலி விமான நிலையத்தில் ஆட்சி மன்ற சபாநாயகர் திரு ஸ்ரான்லி திலகரத்தின வந்திறங்கிய போது அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப் பட்டது.

அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகரா முதலில் மலர்மாலைசூட்டி சபாநாயகரை வரவேற்றார். தொடர்ந்து மயிலிட்டி கி ச தலைவர் திரு கே ரி ராஜதுரை, வலிகிழக்கு காரியாசருகாரி திரு மாணிக்க நடராசா ஆகியோர் மலர்மாலை சூட்டினர்.

விமானநிலையத்தில் தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த திரு வி என் நவரத்தினம் எம் பி, திரு வி தர்மலிங்கம் எம் பி, திரு ஜெயக்கொடி எம் பி ஆகியோரும், தமிழ் காங்கிரஸ் திரு வி அருளம்பலம் எம் பி, திரு தியாகராசா எம் பி, நியமன எம்பி திரு எம் ஸி சுப்பிர மணியம், திரு அல்பிரட் துரையப்பா திரு வி பொன்னம்பலம். வடமாநில வித்தியாதிபதி திரு மகாநந்தில உட்படப் பலர் சபாநாயகரை நேற்று வரவேற்றனர்.

சபாநாயகர் பலாலி விமான நிலையத்திலிருந்து நேரடியாக காங்கேசன் துறை சிமெந்து தொழிற்சாலை விருந்தினர் விடுதிக்குச்சென்று அங்கிருந்து மல்லாகம் பழம் பிள்ளையார் கோவிலுக்குச் சென்று ஆலய ஆராதனையில்கலந்து கொண்டார். ஆலய பிரதமகுரு முத்தையாகுரு பிரசாதம் வழங்கினர்.

பின்னர் மல்லாகம் மகா வித்தியாலயத்தில் சபா

(5-ம் பக்கம் பார்க்க)

## 1930-ம் ஆண்டு தீண்டாமை ஒழிப்பில் நான் சேரவில்லை

### அட்டோர்னி ஜெனரலின் வழக்கில் 'சுந்தரர்' சாட்சியம்

யாழ்ப்பாணம். செவ்வாய்

1930ம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் நான் கலந்துகொள்ளவில்லை என ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக நடந்த வழக்கு ஒன்றில் திரு. சி. சுந்தரலிங்கம் கூறினர்.

யாழ். மாவட்ட நீதிபதி திரு ஏ வைத்திலிங்கம் முன்னிலையில் மூன்றுவது தினமாக நேற்று இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஆதீனகர்த்தாவான துரைசாமிக் குருக்கள்மீதும் சி. சுந்தரலிங்கம்மீதும் ஆலயப் பிரவேசத்தைத் தடுக்கக்கூடாதென அட்டர்ணி ஜெனரல் வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

மனுதார் தரப்பில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு எல். டி. குருசாமி ஆஜரானர். எதிர்மனுதார் சார்பில் அட்வகேட் சி. சுந்தரலிங்கம், அட்வகேட் ராஜ ராஜேஸ்வரன் தங்கராஜாவின் உதவியுடன் புறக்டர் உலகநாதனின் ஒனுசரணையுடன் ஆஜரானர்.

திரு. சுந்தரலிங்கம் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போதுகூறியதாவது: 1970ம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தேன். அதற்கு முன் 65ம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தேன். 60ம் ஆண்டுக்குப் பின் எம்.பி.யாகவோ, பட்டினசபைஉறுப்பினராகவோ இருக்கவில்லை. 63ம் ஆண்டு மாவை ஆலயப் பிரவேசப் பிரச்னையில் ஈடுபட்டேன். நல்லூர் கைலாயப் பிள்ளையார் கோவிலில் எல்லோரும் பாகுபாடின்றி சென்று வழிபட்டனர். 56ம் ஆண்டுக்கு முன் சிறுபான்மைச் சமூகத்தவர் சென்று வழிபடவில்லை.

பாலசுந்தரக் குருக்களும் சாட்சியமளித்தார். விசாரணை தொடர்ந்து இன்று நடைபெறும். (உ.நி)

## பிரயாணியை கண்டக்டர் தாக்கினராம்

சங்கானை, திங்கள்

சித்தன்கேணியில் பஸ்ஸில் ஏறிய பிரயாணி ஒருவர் சங்கானை பஸ் தரிப்பு நிலையத்தில் வைத்து அதே பஸ் கண்டக்டராலும் அதில் பிரயாணஞ்செய்த இன்னுமொருவராலும் தாக்கப்பட்டாராம். மேற்படி பிரயாணி தொடர்ந்து பிரயாணம் செய்வதற்குரிக்கற்கொடுக்க மறுத்த கண்டக்ரர் அவரை இழுத்து வெளியில் தள்ளியபோது கைகலப்பு ஏற்பட்டதாகத்தெரிகிறது.

இதுசம்பந்தமாக பஸ்ஸில் பிரயாணம் செய்த பிரயாணிகளும் சங்கானை பிரயாணிகள் சங்கத் தலைவர் திரு. சி. குலநாயகமும் இ. போ. ச. முகாமையாளரிடம் புகார் செய்துள்ளனர். மானிப்பாய் பட்டினசபையில் கடமையாற்றும் சிவலிங்கம் என்பவரே தாக்கப்பட்டபிரயாணி என்று தெரிகிறது.

இப் பத்திரிகை "ஈழநாடு லிமிடெட்" ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு மார்ச் மாதம் 2-ந்தேதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

"வடபகுதியில் வாழும் சிங்கள மக்களே

## வடக்குத் தெற்கு ஒற்றுமைக்கு வழிகாட்டிகளாக வேண்டும்"

யாழ்ப்பாணம், செவ்

தமிழ்மக்கள் மத்தியிலே வாழுகின்றசிங்களமக்கள் தமிழ்மக்களின் நல்ல பண்பாட்டையும் அன்புணர்ச்சியையும்தென் பகுதியிலுள்ளவர்களுக்கு நேரடியாக எடுத்துச் சொல்ல வேண்டும். இதனல் நமது நாட்டில் சௌசன்ய உறவு நிலைப்பதற்கு வழியுண்டாகும்.

இவ்வாறு இலங்கைஆட்சி மன்ற சபாநாயகர் திரு ஸ்டான்லி திலகரத்தின நேற்று யாழ்ப்பாணத்தில் பேசும்போது தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் சிங்கள மகா வித்தியாலயத்தில்மேற்படி வித்தியாலய அதிபர் திரு ஏ. பி. டி. சில்வா தலைமையில் கூட்டம்நடைபெற்றது சபாநாயகர் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்தவை வருமாறு:

இந்த நாட்டில் சகல மக்களும் பரந்த நோக்கத்துடன் வாழ்ந்து நாட்டின் முன்னேற்றத்துக்கு உழைக்க வேண்டும்.

ஒவ்வொருவருக்கும் தமது மொழி சமயம் இனம்என்ற பற்றிருப்பது இயற்கையானது. அவரவர்களுக்கு அவரவர் சமயமும் மொழியும் இனமும் பெரிதாகும். ஒவ்வொருவரும் மற்றவர்களை வெறுக்காத நிலையிலேதான் உண்மையான ஒற்றுமை உருவாக முடியும்

திரு வி, பொன்னம்பலம் சிங்களத்தில் பேசியபோது குறிப்பிட்டவை வருமாறு:

ஒரு வைத்திய சாலையிலுள்ள வைத்தியருக்கு நோயாளி எந்த இனத்[illegible] போல நானும் சமூகத்திலுள்ள ஒவ்வொருவரையும் மனிதனுகவே பார்க்கின்றேன்.

வடமாநிலக்கல்வி அதிபதி திரு மகாதந்தில பேசுகையில் எதிர்காலத்தில் சிங்கள மகாவித்தியாலயத்தை பாரிய கல்லூரியாக்க ஆவன செய்வதாகக் கூறினர்.

நியமன எம் பி திரு எம். ஸி சுப்பிரமணியம் பேசியபோது குறிப்பிட்டவை: சபாநாயகர் சாதி, மொழி வேறுபாடற்ற சேவையில் முன்னணியிற் திகழ்பவர் இப்படியானவர்களினலேதான் நாடு ஒற்றுமையுடன் முன்னேறும். யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகர சிங்கள மகா வித்தியாளயத்தில் ஓர் தமிழ் மாணவன் அண்மையில் சிங்களப் பேச்சுப்பேட்டியில் பரிசுபெற்றதை பாராட்டினர்.

வண கடவத்துவே நந்தராம தேரோ, திரு குணசேகர முதலியோரும் பேசினர்கள். திரு அல்பிறட் துரையப்பாவும் கலந்து கொண்டார். (கு வி ம)

## விபத்து மரணமே

யாழ்ப்பாணம், செவ்.

உரும்பராயைச் சேர்ந்த திருமதி வனிதா ரமணி என்ற இளம்பெண் விவாகமாகிச் சில நாட்களில்தமது உடலில் மண்ணெண்ணெய் ஊற்றித் தமக்குத்தாமே தீமூட்டித் தற்கொலைசெய்து கொண்டதாகவும், புத்தளத்தில் கட்டுந்தாபனமொன்றில் கடமையாற்றும் தமது கணவருடன் அங்கு வாழ்ந்துவந்த இவர் சீதனப் பிரச்னை காரணமாக மனக்குழப்பமடைந்தாரென்றும் 'ஈழநாடு' நேற்றைய இதழில் வெளியான செய்தியில், சீதனப்பிரச்னை என்றிருப்பது தவறென்றும் சீதனம் சம்பந்தமாக எந்தப்பிரச்னையும் இருக்கவில்லையென்றும் பிரஸ்தாப பெண் தற்கொலைசெய்யவில்லையென்றும் விபத்தினுல் இம்மரணம் சம்பவித்ததாகவும் இறந்த பெண்ணினதும் பெண்ணின் கணவரினதும் குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

## இந்தியா.:

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்திவிட்டுவந்தே வாக்களித்தார்.

### 89 வயது மூதாட்டிக்கு 58 வயது

சென்னையிலுள்ள வாக்குச் சாவடியொன்றில் வாக்களிக்கவந்த 89 வயது மூதாட்டியின் வயது 58 ஆக பதியப்பட்டிருந்ததால் ஆட்சேபிக்கப் பட்டார். பின்னர் அவர் தன்னுடைய வயதை உறுதி செய்தபின்னர் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டார்.

### நாகர்கோவிலில் சிப்பந்தி நீக்கம்

நாகர்கோவிலில் வாக்குச் சாவடியில் வாக்குப் பதிவுக்காக நியமிக்கப்பட்ட சிப்பந்தி ஒருவர் வாக்காளர்களின் விரலில் மைபூசத்தவறி விட்ட காரணத்தினுல் உடனடியாக வேலைநீக்கஞ் செய்யப்பட்டார்.

### பீகாரில் 2 கொல்லப்பட்டனர்

பீகாரில் வாதல்பூர் என்னும் இடத்திலுள்ள வாக்குச் சாவடியொன்றில் ஏற்பட்ட கலவரத்தில் இருவர் கொல்லப்பட்டனர், மூவர் படுகாயமடைந் துள்ளனர்.

### ஆசாமில்

ஆசாமில் வாக்குச்சாவடி ஒன்றில் தேர்தல் அதிகாரி இறந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பேரன் தோளில் 85 வயது மூதாட்டி

ஒரு வாக்குச்சாவடியில் வாக்களிப்பதற்காக 85 வயதுள்ள மூதாட்டி ஒருவர் பேரனின் தோளில் ஏறி வந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org